தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, தை 22 (4-2-'61) சனிக்கிழமை | இதழ் 33

வேலூரில் துவங்கிய வேதனை

கண்ணதாசன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அப்படிச் சத்தம் போட்டவர்களிடையே, அந்த இடத்தில் அரசியல் தலைவர்கள் யாரும் இல்லை. பெரும்பாலும் சினிமாக் கம்பெனி ஊழியர்களே காணப்பட்டனர். சென்னையிலிருந்து புறப்பட்ட நான் 21-ந் தேதிக் காலை 11 மணிக்கு, நேரே அந்தக் கட்டடத்திற்குத் தான் போனேன். அங்கே சிலர் நின்ற நிலையும், பார்த்த பார்வையும், மறக்க முடியாதவை. இரண்டொரு ஜீப் கார்கள் குறுக்கும் நெடுக்குமாகப்பாய்ந்துகொண்டிருந்தன.

சினிமாவில் 'சஸ்பென்ஸ்' என்பார்கள்; அந்த 'சஸ்பென்ஸ்' அங்கே நிலவியது. என்னால் ஓரளவு அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அங்கே செட்டியார்கள், செட்டியார்கள் என்று இரண்டொருவர் பேசிக்கொண்டிருந்ததைத் தவிர, வேறு அருவருப்பான செய்திகள் ஒன்றும் காதில் விழவில்லை. அங்கிருந்து நேரே மேயரவர்கள் தங்கியிருந்த விடுதிக்கு வந்தேன். ஒருமணி நேரந்தான் ஆகியிருக்கும், தோழர் டி. எம். பார்த்தசாரதிஅவர்கள் பதறிக்கொண்டு ஓடிவந்தார்கள். பதட்டத்தோடு, செயற்குழுவில் நடந்துகொண்டிருந்த ரசாபாசத்தை - அல்லது பரபரப்பை, தான் கேட்டறிந்தபடிச் சொன்னார்கள். மேயரின் கண்கள் கலங்கி விட்டன. அங்கே கூடியிருந்தோர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருந்தார்கள். ஆனால் யாரும் செயற்குழுக் கட்டடத்திற்குச் செல்லவில்லை.

இதில், தோழர் அன்பழகன் பங்கு கணிசமான அளவு இருந்தது உடனே தெரிய வந்தது. ஏக வசனத்தைத் துவங்கி வைத்தவரும் அவர் தானும். அவர் தோழர் சம்பத்திடம், "நான் உன்னைவிட அதிகமாகப் படித்திருக்கிறேன். உன்னைவிட அழகாகப் பேசுகிறேன். எனக்கில்லாத செல்வாக்கு உனக்கு ஏன்?" என்று கேட்டாராம். இதைக் கேள்விப்பட்டதும் உள் நோக்கங்கள் புரியலாயின.

அதைத் தொடர்ந்து, செய்தி மேல் செய்தியாகப் பல விஷயங்கள் அங்குமிங்கும் பேசப்பட்டன. மாலை 3 மணியளவில், தோழர் சம்பத் இராஜினுமாச் செய்யப் போகிறார் என்று ஒரு செய்தி வந்தது. எங்களால் திகைக்கவும், கலங்கவும் முடிந்ததே தவிர, செய்திகளை விளக்கமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நான்கு மணியளவில் செயற் குழுக் கட்டடத்திலிருந்து இரண்டு கார்கள் வந்தன. எம் ஜியார் பிக்சர்சைச் சேர்ந்த வீரப்பன் என்ற நபரும், திருச்சித் தோழர் ஜி. பராங்குசமும், சென்னைத் தோழர்கள், அ. பொ. அரசு, கோ. செங்குட்டுவன் ஆகியோரும், திராவிட நாடு அலுவலகத் தோழர் ஈழத்தடிகளும், காஞ்சித்தோழர் சி.வி. இராசகோபால் அவர்களும் பொதுக்குழு உறுப்பினர்கள்ஒவ்வொருவரையும் தனித் தனியாக, ரகசியமாகஅழைத்துக்கொண்டு போனார்கள்.

எதற்கென்று புரியாமல் நாங்கள் திகைத்துக்கொண்டிருந்த போது, கோவைத் தோழர் ஒருவர் ஓடிவந்து. ஏதோ கையெழுத்து வாங்குகிறார்கள் என்று சொன்னார். நான் எட்டிப் பார்த்தேன். "அண்ணா சொன்னார், கையெழுத்துப் போடு" என்று அவர்கள் மிரட்டிக் கொண்டு இருந்தார்கள். போட மாட்டார்களென்று யார்யாரைக் கருதினார்களோ, அவர்களிடமெல்லாம், "வேறொன்றுமில்லை, பொதுக்குழுவைச் சீக்கிரம் கூட்டச் சொல்லியிருக்கிறது. படிக்க வேண்டாம் கையெழுத்துப் போடு" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதை நம்பிக் கையெழுத்துப் போட்டவர்கள் பலபேர், என்னிடம் ஓடி வந்து, ஏமாற்றிக் கையெழுத்து வாங்கிவிட்டார்களென்று பதறினார்கள். (அவர்கள் எல்லோருமே 'எங்களுக்குச் சம்பத் வேண்டும்' என்று எழுதி, அப்பொழுதே கையெழுத்திட்டார்கள். அவர்களை இப்போதும் விசாரித்துப் பார்க்கலாம்.)

இதில் பெரும்பங்கு கொண்டவர்கள், எம்ஜியார் பிக்சர்ஸ் ஊழியர்கள் என்பதை மறைப்பதற்கில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக் குழு உறுப்பினர் ஒருவரிடம் அவர்கள் கையெழுத்துக் கேட்டார்கள். அவர் போட மறுத்தார். உடனே, "இவர் நாடார், போட மாட்டார்" என்றார்கள். உணர்ந்து களையப்பட வேண்டிய ஜாதிக்குணம் சிலரிடம் இருப்பதால், இதை நான் வெளியிடுகிறேன்.

இந்த வேதனையான வேடிக்கை தொடர்ந்துகொண்டே இருந்தது. அங்கே சம்பத்தின் இராஜினுமாவை அவர் திரும்பப் பெறும்படிச் செய்யும் முயற்சியில், அண்ணா அவர்கள் ஈடுபட்டிருந்ததாகச்செய்திவந்தது. அதே நேரத்தில்தான், இங்கே நம்பிக்கை இல்லாத தீர்மானத்தில் ஒரு குழுவினர்கையெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள் என்பதையும் மறைக்கவேண்டியதில்லை. அண்ணா அவர்களுக்கும் சம்பத்துக்கும் கட்சி நலனில் இருந்த அக்கறை, செயற்குழுவிலிருந்த பெரும்பாலோருக்கு அப்போது இல்லையென்பது தெளிவு. சம்பத்தைத் துரத்தியே தீரவேண்டும், என்று அவர்கள் பகிரங்கமாகப் பேசினார்கள். ஆனால் சம்பத் என்பவர் தனி நபர் அல்ல என்பதையும், அவரது தத்துவங்களை நம்புவோர் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்பதையும், முழுக்க முழுக்க ஒப்புக்கொண்டவர்கள் தான் அவர்கள் என்பதையும், அந்தக் குழுவினர் அப்போது மறந்துவிட்டனர்.

இரவு 8-30 மணிக்கு, நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குத் தோழர் சம்பத் அவர்கள் வந்தார்கள். அவரைப் பார்த்ததும் பலரது கண்கள் கலங்கிவிட்டன. தி.கவிலிருந்து நாம் பிரியும்போது, எந்தச் சம்பத்தைக் காட்டி நம்மைப் பலப்படுத்திக் கொண்டோமோ, அந்தச் சம்பத், என்றைக்கும் பெரியாரது சொத்துக்களுக்குத் தான்தான் வாரிசு என்று இருந்தும், அதைத் துறந்து வந்தாரே அந்தச் சம்பத், அதன் காரணமாகப் பெரியாரால் என்னைக் கொல்ல வந்த கொலைகாரன் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அதே சம்பத், பெரியாரின் பக்தர்களைப் பார்த்து, "அவரது பிள்ளை நான் சொல்லுகிறேன் வா இந்தப் பக்கம்," என்று அழைத்து வந்த அதே சம்பத்-கண் கலங்காதா? கவலை வாராதா? அவர் என்னவோ அமைதியாகத்தான் இருந்தார். பல்வேறு மாவட்டத் தோழர்களும் அங்கே வந்து குவிந்தனர்.

மூன்று மாவட்டச் செயலாளர்கள், நான்கு எம். எல். ஏக்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

எழுத முடியவில்லையே! ஏன்?

நா. ஜகந்நாதன், எம்., ஏ.

‘ஏகம்பவாணன்’; என்ற புனைப் பெயரில் புகுந்துகொண்டிருந்த எழுத்தாளர் கண்ணாயிரம் பிள்ளை அவர்கள், அறையை ஒரு நோட்டம் விட்டுப் பெருமகிழ்ச்சியுற்றார். பெருமிதச் சிரிப்பு ஒன்று அவர் முகத்தில் தவழ்ந்தது. கண்ணைப் பறிக்கும் விதத்தில் பளபளவென்று ஒரு தேக்குமர மேசை, இரண்டு நாற்காலிகள், உட்கார ஒரு சோபா, நிலைக் கண்ணாடி பதித்த ஆள்உயரமிருந்த ஒரு பீரோ, இவையாவும் அவர் அறையை அலங்கரித்துக் கொண்டிருந்தன. நேற்றுத்தான் இவை வந்திறங்கின. இன்று அவைகளை எல்லாம் உரிய இடத்தில் வைத்து மன மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்தார். அவர் மனைவியைக் கூப்பிட்டு “சரிதானா? இந்த இடத்தில்தானே மேசை போடச் சொன்னாய்? பீரோ அங்கே தானே இருக்கவேண்டும்?” என்று கேட்டார்; அவர் மனைவியும் வாயெல்லாம் பல்லைக்காட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டாள். தன் கணவர் பேனாவினால் இவ்வளவு பணம் குவித்ததைக் கண்டு எந்த மனைவிதான் மகிழமாட்டாள்?

கண்ணாயிரம் இந்த மகிழ்ச்சிக் கடலில் புகுந்த காரணத்தால், சில நாட்கள் எழுதவே உட்காரவில்லை. எழுதவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் இருந்தார். பீரோவைப் பார்ப்பதும், மேசையைப் பார்ப்பதுமாய்க் காலம் கழித்துவந்தார். பாங்கியில் ஏராளமாகப் பணம் இருந்ததால், அதை வைத்துக்கொண்டு காலம் தள்ளி வந்தார். மாதங்கள் பல சென்றன, ஒரு பத்திரிகையிலாவது ஏகம்பவாணனின் கதைகள் வரவில்லை. “என்ன சார்! ஒன்றும் எழுதுவதில்லையா?” “ஏன் சார்? எழுவதையே விட்டுவிட்டீர்களா?” என்றெல்லாம் நண்பர்கள் கேட்கத் தொடங்கினார்கள். சில இதழாசிரியர்கள் கட்டுரை வேண்டும், கதை வேண்டும் என்று கேட்டுக் கடிதங்களும் எழுதியிருந்தார்கள். அவைகள் எல்லாம் அவரது புதிய தேக்குமர மேசைமீது கிடந்தன; பதில் கூட எழுதப்படாமல்.

ஒருநாள் ஏகம்பவாணன் வேலை ஒன்றுமில்லாமல் இருந்தபோது, தன்னைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். “ஆ! இத்தனை நாளும் ஏன் எழுதாமல் போனேம்?” என்று வருந்தினார். உடனே எழுத உட்கார்ந்தார். புதிய தேக்குமர மேசை, கையால் பிடித்திழுத்தால் வரும் பலகை, நல்ல காகிதம், பார்க்கர் தங்க மூடிப் பேனா, இத்யாதி உபகரணங்களுடன் (!) எழுத உட்கார்ந்தார். சிந்தித்தார். எதைப் பற்றி எழுதலாம்! கதை எழுதுவதற்குக் கருவே ஒன்றும் உதயமாகவில்லை; கட்டுரை எழுதலாமா? பொருள் என்ன? அதற்கும் விவரங்கள் சேகரிக்க வேண்டாமா? சரி, சரி. கதையே எழுதலாம். நாளையதினம் ஏதாவது கரு உதயமாகும்; நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டார். அதற்குள் அவரின் அருமை மனைவி அறுசுவை விருந்து தயார் என்று அறிவித்ததும், எழுத்தை முட்டைகட்டி வைத்துவிட்டு, எழுந்து சென்றார் உண்ண; தின்றார் வயிறு புடைக்க. பிறகு தூக்கத்தின் அணைப்பில் மகிழ்ந்து, மிதக்கலானார்.

இப்படிப் பலநாட்கள் சென்றன; உட்காருவதும், எழுதத் தொடங்குவதும், சிந்திப்பதுமாய் இருந்தாரே ஒழிய, ஒன்றும் எழுதமுடியவில்லை. கதை எழுதக் கருஒன்றும் தோன்றவில்லை; கட்டுரை எழுத விஷயமில்லை. எழுதினாலும் ஒரு பக்கத்திற்கு மேல் ஓடவில்லை. மேசையும், நாற்காலியும், பார்க்கர் பேனாவும் இருந்தும் அவரால் எழுத முடியவில்லை. காரணம் தெரியாமல் கலங்கினார் கண்ணாயிரம் பிள்ளை. கதை எழுதக் கருவைத் தேடி, ஆங்கிலப் படங்களை விடாமல் பார்த்தார்; இந்திப்படங்களையும் விடவில்லை; ஆங்கில நூல்களை வாங்கிப் படித்தார். ஒன்றும் பலனில்லை.

மாதங்கள் பல சென்றன. எழுத்தாளர் ஏகம்பவாணனை, “ஏன் சார்! கதை எழுதுவதையே விட்டுவிட்டீர்களா?” என்று கேட்பதை விட்டுவிட்டனர், அவர் நண்பர்கள். எழுத்துலகிலிருந்து சொல்லாமல், கொள்ளாமல் விடை பெற்றுக்கொண்டார் கண்ணாயிரம். ஒரு விண்மீன் இலக்கிய வானிலிருந்து மறைந்தது. பத்திரிகைகள், எழுத்தாளரைக் கதை, கட்டுரை கேட்பதை விட்டுவிட்டன. அவ்வப்போது அவர் வெகு கடினப்பட்டு எழுதிய கட்டுரைகளும், “பழைய சுவை” இல்லை என்று திரும்பி வந்துவிட்டன.

ஒருநாள் தம்முடைய அருமையான ‘டன்லபிளோ’ மெத்தை போடப்பட்ட கட்டிலில் படுத்தபடி கண்ணாயிரம் பிள்ளை தம் வாழ்க்கையின் பழைய பகுதிகளை எண்ணிக்கொண்டிருந்தார். தாம் எழுத்துலகில் நுழைந்தது, வளர்ந்தது, புகழேணிக்குச் சென்றது, ஆகியவைகளைச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இன்றைய நிலைமையையும் எண்ணிப்பார்த்தார். இது ஏன் என்று அவரால் உணர முடியவில்லை. அவரது வாழ்க்கையின் முதற் பகுதிகளை நாம் காண்போம், விடை காணலாம்.

எழுத்தாளர் கண்ணாயிரம் முதன்முதலில் ஒரு சிறுகதைப் போட்டியில் கலந்துகொண்டார், விளையாட்டாக. அந்தப் போட்டிக்காக அவர் எழுதிய கதை ஒன்று - உண்மையான ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. மிகவும் சிறப்பாக அமைந்திருந்ததால், போட்டியில் அவருக்கு முதற் பரிசு கிடைத்தது. ஆனால் தொகை மிகவும் சிறிய தொகைதான். அதற்குப் பிறகு மேலும் மேலும் கதைகள் எழுதி அனுப்புமாறு அழைப்புகள் கிடைத்தன; எழுதினார்; பிரசுரமாயின; அவ்வப்போது சிறிது சிறிது அன்பளிப்புத் தொகையும் கிடைத்தன.

தரையில் உட்கார்ந்து, கட்டாந்தரையில் காகிதத்தை வைத்துக்கொண்டு அவர் எழுதியிருக்கிறார்; தொடையின்மீது, காகிதத்தை வைத்து, அருமையான கதைகளை உருவாக்கியிருக்கிறார்; புத்தகத்தின்மீது காகிதத்தை வைத்து எழுதியுள்ளார். அவையெல்லாம் பிரசுரமாயின.

சில நாட்களில் காகிதம் இல்லாததால், கதை எழுத முடியாமல் தவித்திருக்கிறார்; கற்பனை ஊற்றெனப் பெருக்கெடுத்தோடும் நாட்களில் காகிதம் இருக்காது எழுத; எந்தப் பத்திரிகையிலிருந்தாவது, அன்பளிப்பு வந்த பிறகு, வீட்டுச் செலவுகளுக்குப் போக மீதியிருக்கும் பணத்தைக் கொண்டு காகிதம் வாங்கி எழுதுவார்; கதை எழுத உட்கார்ந்தால் நடை விறு விறுவென ஓடும்; தங்குதடையில்லாமல் எழுதுவார்; அடித்தல், திருத்தல் ஒன்றும் இருக்காது; சரளமான நடை என்று இலக்கிய உலகில் சொல்கிறார்களே, அந்த நடை இத்தகைய சூழ்நிலைகளில்தானே உருவாகிறது.

சில நாட்களில், கதை எழுதி விட்டு முடித்து, தபால்தலை வாங்கப் பணமில்லாமல் தவித்திருக்கிறார். பிறகு சிந்தித்து, தானே நடந்துசென்று, நகரத்திலிருக்கும் பத்திரிகைகளில் ஏதாவது ஒன்றிற்குக் கொடுத்துவிட்டு வருவார்; இத்தகைய கதைகள் ஏராளம் அவர் எழுதியவை. மின்சாரவிளக்கு இல்லாமல், சாதாரண அரிக்கேன் விளக்கின் அடியில்உட்கார்ந்து, மணிக்கணக்கில் எழுதுவார். குழந்தைகளின் பிக்கல், பிடுங்கல், மனைவியின் நச்சரிப்பு, கடன்காரர்களின் தொல்லை, இவற்றிற்கிடையே அவர் ‘சாகாவரம்’ பெற்ற பல நவீனங்களை எழுதி முடித்திருக்கிறார். படிப்பவர்கள் எல்லாம் வியந்தார்கள்; எப்படி எழுதுகிறார் இவர்? எங்ஙனம் அமைகிறது இத்தகைய அற்புத நடை என்று புகழ்ந்தார்கள். ஏராளமாக எழுதி, இலக்கிய உலகில் நிரந்தரமாக ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டார். ‘கதைகளை எல்லாம் தொகுத்து புத்தகம் போட விரும்புகிறேன்’ ‘உங்கள் நாவல்களை வெளியிடும் உரிமையை என்னிடம் தான் கொடுக்க வேண்டும்’ “நான் அதைவிட அதிகமான ராயலட்டி தருகிறேன்” என்று பதிப்பாளர்கள் அவர் வீட்டு வாயிற்படியில் “க்யூ” வரிசையில் நின்றார்கள்; ஏராளமான நூல்கள் வெளியாயின. எந்தெந்தப் பதிப்பாளரிடமிருந்து, எந்தெந்தப் புத்தகங்களிலிருந்து எவ்வளவு வருமானம் வந்தது என்பதைக் கண்காணிக்கவே தனியாக ஒரு கணக்கரை அமர்த்திக்கொண்டார்; பொருள் குவிந்தது; புகழ் மிகுந்தது; பெருமை பிடிபடவில்லை.

மின்சார விளக்கும், ட்யூப் விளக்கும், மின்விசிறியும், கட்டிலும், பீரோவும் வந்தன; பளபளப்பு மிகுந்தது. ஆடம்பரமும், ஆரவாரமும் மிகுந்தன; அமைதியான சூழ்நிலை மறைந்தது; நண்பர்கள் மிகுந்தனர்; தேநீர் விருந்தென்றும்; பாராட்டு விழாவென்றும் நேரம் கழிந்தது; கற்பனை மறையலாயிற்று; செல்வம் வந்தால், செருக்கும் வரும் என்பதற்கேற்ப கண்ணாயிரம் பிள்ளை கீழே குனிந்து பார்ப்பதையே விட்டுவிட்டார்; வணங்காத் தலையாயிற்று அவர் தலை. பார்க்கர் பேனாவும், பளபளக்கும் காகிதமும் இருந்தும், அவர் எழுத முடியவில்லை. அரிக்கேன் விளக்கில், மைக்கூட்டில் பேனாக்கட்டைத் தோய்த்து எழுதிய வேகம் இப்போதில்லை.

இவைகள் எல்லாம் கண்ணாயிரம் பிள்ளையின் நினைவில் நிழற் படம்போல் திரையிட்டன. எழுத்தாளர் ‘ஏகம்பவாணன் வாய் மெதுவாக உச்சரித்தது.

“எழுத்தாளன் வறுமையில் தான் பிரகாசிக்கிறான்,”



"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 4-2-'61 | இதழ் 33

நல்ல முடிவு

கடந்த 21-1-61 முதல் 2-2-61 வரையில்-இடைப்பட்ட நாட்கள்-அச்சமும் அவலமும் கரை புரண்ட நாட்கள்.

நாட்டின் நல்வாழ்வு, கழகத்தின் வெற்றியில் இருக்கிறது என்று நெஞ்சார நம்பி இருந்த இலட்சக்கணக்கான நல்லவர்களின் இதயத்தில் 'இடி'தாக்கியதுபோல் இருந்தது வேலூர் நிகழ்ச்சிகள்.

ஒரு விடுதலே இயக்கம் உருவாகி, மாற்ருர் மதிக்கும் அளவுக்கு வளர்வது எளிதான செயல் அல்ல. உலகில் அடிமைப்பட்ட நாடுகளின் விடுதலே வரலாறுகளே காண்பவர்கள் இந்த உண்மையை உணர்வார்கள்.

எத்தனேயோ நாடுகளில், விடுதலே இயக்கங்கள் தோன்றித் தோன்றி, தலேதூக்கி வளர முடியாமல், தரை மட்டமாகி இருக்கின்றன.

எத்தனேயோ விடுதலே இயக்கங்கள், விடுதலேயின் மேன்மையை-அவசியத்தை-மக்களுக்கு உணர்த்தி, ஆர்வம் ஊட்டி, பின்பற்றி வரச் செய்யமுடியாமல், நீண்ட நெடுங்காலம் வளர்ச்சியின்றித் தயங்கிக் கிடந்திருக்கின்றன.

எத்தனேயோ விடுதலே இயக்கங்கள், தூய கொள்கைகளேக் கொண்டிருந்தும் நடைமுறையில், குழப்பங்களில் சிக்கித் தன்னேத் தானே அழித்துவிட்டிருக்கின்றன.

அயர்லாந்து பிரிட்டனுடைய பிடியிலிருந்து தன்னே விடுவித்துக்கொள்ள சுமார் 150 ஆண்டுக்காலம் போராடி-குருதி கொட்டியிருக்கிறது.

சீனுவின் அடிமைக்கால வரலாறு, படிப்பவரின் நெஞ்சத்தைப் பிசைந்து குருதி கொட்டச் செய்துவிடும். கொள்கை தூயதாக இருந்தும், நிறைவேற்றும் வழிகளில் பிழை மலிந்து சிதறியதற்கு சீனு எடுத்துக் காட்டாகும்.

இத்தாலியின் அடிமை வாழ்வு, எல்லாரும் அறிந்த ஒன்று.

இப்படி எடுத்துக்காட்டுகள் நூற்றுக்கணக்கில் சொல்லலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை விடுதலே இயக்கங்களின் வரிசையில் நிறுத்தி ஆராய்ந்தால் தி. மு. க. பால்மணம் மாருத 'மதலே'யாகவே தோன்றும்.

1949-ல் தோன்றி 12 ஆண்டு பிராயத்திலிருக்கும் தி. மு. க. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நின்று நிலவிய இயக்கங்கள் வரிசையில் குழந்தையாகத்தானே இருக்கமுடியும்?

அந்தக் குழந்தை கடந்த 12 ஆண்டுகளில் சாதித்தவைகள் சிந்தனேயாளர் உள்ளத்தில் வியப்பை உண்டாக்கத்தக்கனவாகும்.

ஏனேய நாடுகளில் உள்ள விடுதலே இயக்கங்கள் "நமது நாடு அந்நியர் பிடியில் இருக்கிறது-விடுதலே பெறவேண்டும்" என்பதைத் தொடக்க உரையாகக் கொண்டிருந்தன.

நமது நாட்டிலோ "நீதான் தமிழன்-திராவிட இனத்தில் ஒரு பிரிவினன்! நீதான் தெலுங்கன்-திராவிட இனத்தில் ஒரு பிரிவினன்! இன்னும் உங்களேப்போல கன்னடத்தான் மலேயாளத்தான் பலர் இருக்கிருர்கள். நீங்கள் வாழுகின்ற நாடுதான் திராவிடநாடு. அது அந்நியன் பிடியில் அடிமையாகி இருக்கிறது-விடுதலே பெற வேண்டும்" என்று தொடங்கவேண்டி இருக்கிறது. சரியாகச் சொன்னுல், இதற்கே இன்னும் போராட வேண்டி இருக்கிறது, என்று சொல்ல வேண்டும்.

திராவிட நாட்டில் பண்பு, கல்வி, அறிவுக்கூர்மை எல்லாம் இருந்தும் நாடு, அரசியல், விடுதலே, தன்மொழி பிறமொழி இவைகளில் ஒன்றுமே தெரியாது என்றே கூறவேண்டும்.

இந்த வகையில் இத்தனே அறியாமை ஏன்? என்ருல் இங்குள்ளவர்கள் பன்னூறு ஆண்டுகளாக இவ்வுலக வாழ்வை நம்பி இருக்கவில்லே. மனித குலத்தையே நம்பி இருக்கவில்லே. தெளிவாகச் சொன்னுல் மனேவி மக்களும்கூட நம்பிக்கை உரியவர்கள் இல்லே. ஆண்டவன் ஒருவனே நம்பப்பட வேண்டியவன் என்கிற தத்துவத்தில் மூழ்கிக் கிடந்தவர்கள்.

இன்றும்கூடச் சிற்றூர்களில் வாழும் முதியவர்கள் பலருக்குத் தான் பேசுவது தமிழ் என்ருே, தெலுங்கு என்ருே, கன்னடம் என்ருே, மலேயாளம் என்ருே தெரியாது. இவர்கள்தான் திராவிடத்தின் முது பெருங்குடியினர். இவர்களுக்கு சுதந்திரமும் நல்வாழ்வும் தேடத் தோன்றியதுதான் தி. மு. க! எளிதான காரியமா?

எனவே, தி. மு. கவின் தொடக்க நாட்களில் அதற்கிருந்த எதிர்ப்பு எதுவும் மாற்ருரிடமிருந்து தோன்றவில்லே. எந்த மக்களின் நல்வாழ்வுக்காக அது பாடுபடத் தோன்றியதோ, அந்த மக்களாலேயே அதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

பஞ்சாங்கத்திற்கு இருந்த மதிப்பு இயக்கப் பத்திரிகைகளுக்கு இருந்ததில்லே. பயனற்ற-பொய்மலிந்த-பொழுதுபோக்கும்-புராணக் கதை! காலட்சேபங்களுக்கும் இருந்த பெருமை கழகப் பொதுக்கூட்டங்களுக்கு இல்லே.

தி. மு. க தோன்றிய நேரம் வடநாட்டிற்கு ஏகாதிபத்தியம் கிடைத்த ஆர்ப்பாட்ட நேரம்- தெருவெல்லாம் "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று" முழங்கிக்கொண்டிருந்த நேரம். எஜமானன் மகன்-ஒத்த வயதுக்காரனுக்குத் திருமணம் நடக்கும் நேரத்தில், தனக்கே திருமணம் நடப்பதுபோல் பூரித்துத் தலேகால் புரியாமல் திரியும் உண்மை வேலேக்காரன்போல திராவிட மக்கள் வடவர் ஏகாதிபத்தியத்தையே தமது சுதந்திரமாகக் கருதி தலேதடுமாறிய நேரம். அந்த நேரத்தில் தி. மு. கவின் தோற்றமும், அதன் குரலும், திராவிட மக்களுக்கு வெறுப்பாக-விகாரமாக-இருந்ததில் அதிசயமில்லே.

ஆனுல், உலக நாடுகளின் விடுதலே இயக்கங்களோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்தால், தி. மு. க அடி நாட்களில் பட்ட சிரமங்கள், முயற்சிகள், அதிசயிக்கத்தக்கவைவே!

இன்று நாட்டில் தி. மு. கவுக்கு ஒரு செல்வாக்கு அரும்பி இருப்பதைக் காணுகிருேம். அந்த செல்வாக்குத் தேவைக்குப் போதுமான அளவு என்று கூறமுடியாது. ஆனுல், தொடக்க கால நிலேமைக்கும் இன்றைய நிலேமைக்கும் இடைக்காலம் 12 ஆண்டுகள்தான் என்பதையும், பிற இயக்கங்கள்-"நமது நாடு அந்நியர் பிடியிலிருந்து விடுதலே பெற வேண்டும்" என்கிற இடத்திலிருந்து ஆரம்பித்த-பிற இயக்கங்களேயும் ஒப்பு நோக்கினுல் "நீதான் திராவிடன்; இது உனது நாடு; அந்நியன் பிடியிலிருக்கிறது; விடுதலே பெற வேண்டும்" என்று ஆரம்பித்த தி. மு. கவின் சிரமம் எத்தகையது என்று தெளிவாகப் புலப்படும்.

இத்தனே சிரமத்தில் வளர்ந்து வலுப்பெற்று வெற்றிப் பாதையில் வீறு நடை கொள்ள வேண்டிய தருணத்தில் வழிகாட்டும் தலேவர்களுக்கிடையே 'கருத்து வேற்றுமை' அல்ல, அல்ல ஒருவரையொருவர் தாக்கும் அளவுக்குச் சச்சரவு-கழகம் இருகூறு-இனி ஒட்டவே ஒட்டாது; என்பனபோன்ற செய்திகள் காட்டுத் தீபோல் பரந்தன.

"இவர்களுக்கு இத்தனே பெருமையா?" என்று கறுவிக் கொண்டிருந்த மாற்ருர்க்கு இந்த 12 நாட்களில் தோளில் 6 (அங்குலம்) விரற்கடையும், மார்பில் 4 விரற்கடையும் சதை ஏற, கழகமே தங்கள் வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டிருந்த பலர், வாடி வதங்கி மார்பும் தோளும் வற்றிப்போனுர்கள்.

நேற்றுவரை இன்முகமும் புன்சிரிப்பும் கொண்டு கண்டவிடத்தில் வரவேற்று அளவளாவிய இயக்கத்தோழர்கள் ஒருவர்க்கொருவர் வேற்றுமை பாராட்டத் தொடங்கினுர்கள். இவன் அண்ணுவின் ஆதரவாளன் என்பதும், அவன் சம்பத்தின் ஆதரவாளன் என்பதும், காணக், கேட்க, நினேக்க, சகிக்கமுடியாததாக வளர்ந்தது.

நேற்றுவரை இனிப்பாக இருந்த கழகத்துக் கவிமுர்களின் பாடல்கள் மறுநாள் கசப்பாகவும் பிழைகள் மலிந்ததாகவும் காணப்பட்டன.

நேற்றுவரை சிறப்பாக இருந்த கழக நடிகரின் நடிப்பு மறுநாள் சிறப்பற்றதாகத் தோன்றியது.

இவை போல் வளர்ந்த விபரீத மனப்போக்குகள் விவரிக்கவே கூச்சமும் அச்சமும் தரத்தக்கனவாக இருந்தன.

கழகத்தின் உள்வலிமையை மிகப்பலர் சிந்திக்கவில்லே. வேலூர் நிகழ்ச்சிகளிலிருந்து ஒரே ஒரு குறை மறுக்க மறைக்க முடியாததாகவும் - விரைவில் அடியோடு திருத்தப்படத்தக்கதாகவும்இருப்பது தெரியவந்தது. அந்தக் குறை என்ன? கருத்து வேற்றுமைகளே வரவேற்கும் பண்பும் நெருக்கடியான கட்டங்களில் உணர்ச்சி வசப்பட்டு கண்ணியத்தை இழப்பதும்தான்! இந்தக் குறை நம்மில் எவருக்குமே தோன்றக்கூடாது. அதிலும் சிறப்பாக தலேமை வாய்ந்த நிர்வாகத்தில் - செயற்குழுவில்-இருப்போருக்கு, எள்ளளவும் தோன்றக் கூடாது.

காங்கிரசில் உட்கோஷ்டி அமைத்துக்கொண்டிருந்த ஆச்சாரியாரை யாரும் வெறுக்கவில்லே-கீழ்த்தரமான முறையில் அவமதிக்கவில்லே.

கோஷ்டியாக வெளியேறிவிட்ட சுபாஸ் போஸை யாரும் அவமதிக்கவில்லே.

விடுதலே இயக்கங்களில் மூலதாரக் கொள்கையில் உடன்பாடும் நிர்மாண வேலேத்திட்டங்களில் வேறுபாடும் கொண்டவர்கள் தனியொரு கோஷ்டியாகிருர்கள், இதுதான் அரசியல் மொழியில் (Rightist Leftist) வலது சிறகினர்-இடது சிறகினர் என்ற அர்த்தத்தில் வலதுசாரி இடதுசாரி என்கிருர்கள். இப்படிப்பட்ட வேற்றுமைகளே வரவேற்கும் பக்குவமும் "இன்சொல்லாலேயே கருத்து வேற்றுமையை மாற்றமுடியும்" என்கிற அனுபவ உண்மையும் கடைப்பிடிக்க வேண்டும்,

எப்படியோ, அண்ணுவும் - சம்பத்தும் நிலேமை சீர்குலேந்து போகுமுன்னுல் தங்களிடையே இருந்த மனவேற்றுமைகளே மறந்து "நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்ருேர் சினம்" என்ற முதுரையின்படி, தம்மைச் சான்ருேர் என மெய்ப்பித்துவிட்டார்கள்.

தி. மு. க. பெற்ற சாதனேகளேவிட பெறவேண்டிய சாதனேகள் மிக மிக அதிகம். பெறவேண்டிய அளவை நினேத்தால் பெற்றவைகளேப் பாராட்டவே முடியாது.

அந்த மாபெரும் சாதனேக்காக அனேவரும் தோளோடு தோள் நின்று பணிசெய்வோமாக.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அறிவு விடு தூது

"அருப்பை கிழார்"

குன்றாப் பகைவர் குடிகேடர் தென்னவரை
ஒன்றாகிப் போயினரென் றோதுகிறார் !—என்றோழர்

காரிருள் நெஞ்சத்தான் கற்பனையாம் கர்ப்பத்தில்
பாரத மாதா பழிகாரி—ஓரிரவில்

தோன்றினாள்! மண்ணுலகில் தோன்றுகிற பெண்மக்கள்
ஈன்ற பொழுதில் இளமங்கை—போன்றிரார் !

பாவி இவளோ பருமங்கை போல் பிறந்தாள் !
ஏவி மயலூட்டி ஏமாந்தார்—ஆவியினைக்

கூட்டோடு கட்டிக் கொடுசேரப் பாழ்வடவர்
நாட்டின்தாய் என்றுபேர் நாட்டினார்—ஊட்டுகின்ற

பால்குடிக்கும் காலத்தே பக்கத்து நாட்டினரைக்
கால்பிடிக்கச் செய்யென்று கற்பித்தார்—வேல்பிடித்த

கண்ணாலே தென்னவர்க்குக் காமத்தீ மூட்டென்று
கண்ணுக்கு மைதீட்டிக் காட்டினார்—பெண்ணவளின்

காதிற் குழையாடக் கண்டோர் உளமாடக்
காதல் வலைவீசக் கற்பித்தார்—கோதிவிட்ட

கூந்தல் அசைந்தாடத் தென்னர் குடியாடும்
காந்தம் இருப்பதுபோல் காட்டினார்—ஏந்துகொங்கை

கச்சுக்குள் நின்றுபெரும் காமப் புயல்வீசும்
விச்சையெலாம் கற்க விதித்திட்டார்—இச்சையுடன்

சேர்ந்தணைய வந்தாரின் செல்வத்தைக் கொள்ளையிடத்
தேர்ந்தநெடுங் கைநான்கு சேயிழைக்கே !—ஆர்ந்தபெரும்

சாத்திரங்கள் தீண்டாத சாதியால் நான்கான
சூத்திரர்க்கு மங்கையிவள் சொந்தமில்லை—"நேத்திரத்தால்

தோன்றுவது கண்டு தொழுவீர் !" எனுங்குறிப்பால்
மூன்றுவண்ணச் சீலையால் மூடினார்—சான்றோர்கள்

சாகக் கிடந்தாலும் தெற்கே தலைவைப்பாய்
வேகக் கிடந்தாலும் வேண்டாமே—ஆகாத

பாழும் வடதிசையைப் பாதத்தில் வைத்துநாம்
வாழும் திசைதெற்கே வாழ்த்துவாய்—சூழுகின்ற

துன்பம் எதுவும் தொடராது மாறாத
இன்பம் கொழிக்குமென்றே ஏத்தினார்—முன்பின்னே

பட்ட துயரத்தால் பண்டறிந்த காரணத்தால்
கெட்ட திசையாக் கிளத்தினார்— துட்டராம்

பேய்வடவர் பெண்ணவளின் பின்காலைத் தென்குமரி
போய்மிதிக்க நீட்டிப் புவிக்கிடத்தித்— தோய்முகிலார்

தண்ணிமய மீது தலைசாயப் போட்டுவிட்டார்
"எண்ணில் புகழ்பெற்ற இன்தமிழிர் !— கண்ணிறைந்த

கட்டழகி யாமிவளின் காலடியில் நீர்இருப்பீர் !
தட்டுகின்ற தூசி தலையேற்பீர் !—பட்டசைந்து

செஞ்சிலம்பு கொஞ்சும் சிறுசதங்கை ஓசையிடும்
பஞ்சடியாள் பாதசரம் பாடுமே !— நுஞ்செவியில் !!

செந்தா மரைமுகமும் சேல்விழியும் வாள்நுதலும்
சிந்தாத முத்துச் சிரிப்பிதழும்— கொந்தாரும்

பூங்குழலும் செங்கரும்பு போல்தோளும் செவ்விளநீர்
ஏங்குகின்ற கொங்கை எழிற்புறமும்— நீங்காத

மேகலைக்குள் நின்று விளையாடும் புற்றரவும்
போகமெலாம் எங்களுக்கே போற்றுவீர் !— சோகமேன் ?

தென்னவரே ! எம்வடவர் சீர்காணீர் ! என்பதுபோல்
கன்னியவள் தென்திசையில் கால்நீட்டி— மன்னவரே

கன்னித் தமிழ்நாட்டுக் காவலரே ! என்காலில்
பின்னிக் கிடந்தாலும் பேசுகிறீர்—அன்னைமொழி

செந்தமிழே, தென்னாடர் சீர்சால் உயிரென்று
சிந்தை மகிழ்வோடு செப்புகிறீர்—இந்தியிலே

காதல் மொழிபேசி கன்னிஎன் உள்ளத்து
மோதல் விலக்க முடியாதா ?—பேதைஎன்

தாய்மொழியாம் இந்தியினைத் தண்டமிழ்போல் கற்றுங்கள்
வாய்மொழியாக் கேட்டு மகிழ்வேனா ?— ஆய்வதேன்

சிந்தையிலே என்காதல் கொஞ்சம் செறிந்திருந்தால்
இந்திமொழி தன்னை எதிர்ப்பீரா ?—விந்தையே

பாவை எனக்குப் பலகோடி பொன்செலவில்
கோவை மணியாரம் கோத்திட்டால்—தேவையிலாக்

காலுக்கும் கோடிப்பொன் காந்திமணிப் பூண்போடக்
கேலிக்கு வாதாடிக் கேட்பீரா ?—காலுக்கே

தண்டை சிலம்பொழியத் தாழ்வடமும் பூட்டுவதைக்
கண்டீரா எங்கேனும் காதலரே ?—ஒண்டொடியார்

காலிற் செருப்பணிந்து காலணிகள் ஏதுமின்றிச்
சாலைப் புறம்வருவார் சந்திப்பீர்—கோலம்செய்

மார்புக்கு வேண்டும் வயிரமணி வாள்மூக்கின்
சார்புக்கு வேண்டும் தனிமுத்து—ஏர்மிக்க

சங்குக் கழுத்தில் சரப்பணியும் தாழ்வடமும்
திங்கட் பதக்கமும் செங்கதிர்த்— தொங்கலுமாப்

பூணாரம் பூட்டிப் புதுப்பொலிவு பாராமல்
வீணான வேற்றுமைகள் காட்டுவதேன்— பேணாமல்

தேய்ந்தது தெற்கென்றும் தேயாத நல்வாழ்வு
வாய்ந்த வடக்கென்றும் வம்புரையேன் ?— ஓய்வின்றி

வாதக் கணையால் வதைக்காதீர் மன்னவரே !
காதற் கிழத்திநான் கைப்பிடித்தீர்— ஓதுவீர் !

எக்கோலம் ஆபாசம் ? எவ்வுறுப்பில் ஆபாசம் ?
கொக்கோகம் கற்றால் குறைகாணீர் !— எக்காலும்

காதலியர் மேனியிலே கண்ணென்றும் காலென்றும்
பேதங்கள் கூறல் பிழையாமே !— பூதலத்தில்

தின்னும் கரும்பினிலே தீஞ்சுவையும் வேர்ப்புறமே !
கன்னியரும் அவ்விதமே காண்பீரே !— பின்னமுறக்

கால்வேறு கைவேறு கண்வேறு பல்வேறு
தோல்வேறு தோள்வேறு சொல்வீரேல்— மேல்வேறு

பெண்ணேது வெவ்வேறாப் பிய்த்துவிட்டால் ? தென்னவரே !
எண்ணாமல் கூறல் இழுக்கன்றோ ?— கண்ணனையீர் !

பூட்டும் நகைஎங்கே பூண்டாலும் காதலிமேல்
நாட்டம் குலையாமல் நாள்தோறும்— தேட்டையெலாம்

கொண்டுவந்து தந்து குலவுவீர் காலடியில்
மிண்டுரைகள் சொல்லாமல் வீற்றிருப்பீர்—பண்டைநாள்

கோவலன்போல் மாதவிபோல் கொஞ்சி மகிழ்ந்திருப்போம்
காவலரே ! என்றாள்அக் காதகியாள் !—நாவலையில்

பட்டார் திராவிடத்தார் பண்டைப் புகழ்செல்வம்
கெட்டார் வளநாடும் கெட்டதே !—கட்டழகுப்

பன்மாயக் கள்ளி பசப்புமொழிக் காளாகித்
தன்மானம் விட்டார் தமிழ்க்குலத்தார்—என்னாகும் ?

நஞ்சுமொழிக் காரி நயவஞ்சக் கூட்டுறவால்
பஞ்சைகள் ஆனார் பழந்தமிழர்—கஞ்சியின்றி

வற்றா வளநாட்டு மக்கள் துடிக்கின்றார்
கற்றார் விழியெல்லாம் கண்ணீரே !—சற்றேனும்

நாட்டுக்கு நாயகர்கள் நாணாமல் வேசியவள்
போட்ட மயக்கப் பொடியாலே—நாட்டையவள்

வேட்டைக் காடாக்கி வேதனையும் கூக்குரலும்
பாட்டுப்போல் கேட்டுப் பழகுகிறார்—வாட்டமின்றிப்

பாங்கியவள் பேச்சுக்கும் பல்லிளிப்பு வீச்சுக்கும்
ஏங்கி வடதில்லி ஏகுகிறார்—ஆங்கிருந்து

வீசுகிற காற்றில் மிதந்துவரும் பூமணமும்
பூசுகிற மஞ்சட் பொடிமணமும்—நாசியிலே

பட்டாலும் முந்தானை பட்டாலும் ஓரக்கண்
பட்டாலும் போதுமென்று பாடுகிறார்—நிட்டூரி

இட்ட மருந்தாலே இக்கோலம் ஆகினார்
பட்ட மரம்போல் பசையற்றார்— கிட்டவே

நாடுவார் நெஞ்சகத்தை நாடிவரும் பேரறிவே !
வாடுவார் வாட்டத்தை வாட்டிவரும்— கேடெல்லாம்

போக்குகின்ற பேரருளே ! போவாய் !! விரைந்தேநீ
நீக்கமற நிற்கும் நெறிகேடி— "நாக்கொழுத்த

பாவையாம் 'பாரத மாதா'வாம் பாவியவள்
காவியங் கண்வீச்சால் காமத்தீ— தாவவிட்டுத்

தென்னகத்தை வஞ்சித்துத் தேய்க்கும் குடிகேடி
முன்னகத்தே சென்று முறைசொல்வாய் !—"சின்னவளே !

பேதைச் சிறுக்கியே ! பீடழிந்த வேசியே !
சூதைத் துணைக்கொண்ட தூர்த்தையே !— நீதியின்றி

அஞ்சாமல் தென்னாட்டை ஆட்டிக் கெடுத்தவளே !
பஞ்சாகு முன்னே பறந்தோடு— நஞ்சனையாய் !

இற்றைநாள் மட்டும் எவர்க்கும் தலைவணங்காக்
கொற்றத் தமிழர் கொதித்தெழுந்தார்— புற்றிருக்கும்

நச்சரவம் போன்றவளே' நாட்டில்கால் வைக்காதே
எச்சரிக்கை கூறுகிறேன் இன்றேநீ— மெச்சுகின்ற

இந்திமொழி பேசும் இளைஞரிடம் போய்ச்சேர்ந்து
சொந்தமுறை பேசிச் சுகித்திருப்பாய்— செந்தமிழர்

பாய்ந்து தலையைப் பனங்காய்போல் சீவாமுன்
சாய்ந்து தரையில் உருளாமுன்—தோய்ந்தொழுகும்

செங்குருதி கங்கையிலே சேராமுன் உன்னாட்டார்
வெங்களத்தில் முண்டமா வீழாமுன்—இங்கிருந்து

மூட்டை முடிச்சோடு முன்பின் திரும்பாமல்
வேட்டைநாய் போல விரைந்தேநீ—ஓட்டமாய்

ஓடடி ஓடடி ஓடி ஒளிந்துபோ
ஓடித் தொலை யென் றுரை.

★

பிற மொழிகளில் தமிழ்

சே.வீ. நம்பி, பீ.காம்., டி.டி.டிப்.

தமிழ்மொழி, மற்ற மொழிகளை விட எல்லா விதத்திலும் வேறுபட்டிருக்கிறது. அதன் எழுத்துக்கள் வரிவடிவத்திலும், ஓசையிலும் மற்ற மொழிகளிடமிருந்து மாறுபட்டிருப்பதோடு, தெளிவாகவும், சுருக்கமாகவும் இருக்கிறது; இலக்கணத்திலும் மற்ற மொழிகளிடமிருந்து வேறுபடுகிறது. இதன் செய்யுள் நடை, கிரேக்க மொழியை விட. தெளிவாகவும், அழகாகவும் இருக்கிறதென்று சொல்லுவது, அதை அதிக அளவிற்குப் புகழ்வதாகாது. தமிழிலிருந்து தோன்றிய மொழிகள், செய்யுள் நடையிலும், உரை நடையிலும் லத்தீன் மொழிகளைவிட ஏராளம்· பலத்திலும், நிறைவிலும் தற்காலத்தில் உலக முழுவதும் புகழ்பெற்ற ஆங்கிலத்திற்கும், ஜெர்மனிக்கும் சரிநிகர் சமானமாக நிற்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அதே நேரத்தில், கவி பாடும் திறம்படைத்தவர்கள் தமிழ் நாட்டில்தான் அதிகம் இருந்திருக்கிறார்களென்றால், இதன் பெருமையை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை!

தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மை படைத்தது. வடமொழியைப்போல· இது உண்டாக்கப்பட்ட மொழி அல்ல! இம்மொழிக்கும் மற்ற மொழிகளுக்கும் சம்பந்தமே கிடையாது. பல மன்னர்களின் ஆதரவால் புகழ்பெற்று விளங்கிய 'வடமொழி' இன்று இறந்த மொழியாக இருப்பதிலிருந்தே அதன் உண்மையான வளத்தைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளலாம்! இம்மொழிக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் மொழி தோன்றி இருக்க வேண்டுமென்று இலக்கியங்கள் வாயிலாகவும்› வரலாற்று வாயிலாகவும் நாம் அறியலாம். வரலாறு தொடங்காததற்கு முன்பிருந்தே தமிழ்மொழி பேச்சு வழக்கில் இருந்திருக்க வேண்டும். அதன் இலக்கண உறுப்புக்கள் மாறுமல் ஒரே விதமாக இருப்பதிலிருந்தே இதை நாம் நன்கு உணரலாம்.

ஆதி மொழி என்று கருதக்கூடிய எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழியும், கிரேக்க மொழியிலிருந்து பாலி மொழியும், பாலி மொழியிலிருந்து வட மொழியும், வட மொழியிலிருந்து அநேக பிராகிருத எழுத்துக்களும் தோன்றின என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இவ்வாறு மொழிகளின் மூலம் வேறொரு மொழியிலிருந்து ஆரம்பமானதாகத் தெரிகிறது. ஆனால். தமிழ்மொழி எந்த ஒரு மொழியிலிருந்தும் உண்டாகவில்லை. என்பதைத்திட்டவட்டமாக நம்மால் சொல்லமுடியும், இன்று உள்ள ஒரு சில வடமொழி எழுத்துக்களையும், அயல் மொழி எழுத்துக்களையும் அகற்றிவிட்டால், புடம் போட்ட பத்தரைமாற்றுத் தங்கமாக தமிழ் மிளிரும் என்பதில் ஐயம் இல்லை.

இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள், போன இடங்களிலெல்லாம் தங்களுடைய பழக்க வழக்கங்களையும், கலாச்சாரத்தையும் பரப்பினார்கள். மற்றமொழிகளில் பெருத்த அளவில் மாறுதல் உண்டாக்கினார்கள்! ஆனால் தமிழ்மொழியில் மட்டும் அவர்களால் எந்தவித மாறுதலையும் செய்ய முடியவில்லை-எவ்வளவோ இடையூறுகள் மொழிக்கு நேர்ந்த போதிலும், ஒரு சில சொற்களையும் எழுத்துக்களையும்தான் புகுத்த முடிந்ததே தவிர, வேறுவிதமான மாறுதல் எதுவும் செய்ய அவர்களால் முடியாமற் போய் விட்டது இன்றுவரை வடமொழி ஒரு அன்னிய மொழியாகவே இருந்து வருவதை நாம் பார்க்கிறோம்!

'திராவிடம்' என்ற வார்த்தையே பிற்காலத்தில் 'திராமிளம்' 'திரமிளம்' 'தமிளம்' என்றுமாறி, பின்பு தமிழ் என்று வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்று நமக்குத் தெரியாது. 'திராவிடம்' என்ற மொழி இருந்திருக்காது என்றும், பலர் கருதுகிறார்கள். இதை வடமொழி என்று சொல்லுபவர்களும் இருக்கிறார்கள்! 'திரு இடம்'-அதாவது 'அழகுள்ளநாடு' என்றும், 'செல்வம் கொழிக்கும் நாடு' என்றும் பொருள் கொள்ளலாம். 'திராவிட மொழி, என்றாலே, 'அழகிய இடத்திலுதித்த தமிழ்' என்று பொருள்! இதனால் இது தூய தமிழ்ச்சொல்லே என்று தெற்றென விளங்கும். மேல்நாட்டு ஆசிரியர்களும் தமிழை மனதில் கொண்டே 'திராவிடமொழி' என்று தமிழை அழைத்திருக்கிறார்கள்.

தமிழ், வடமொழியிலிருத்து தான் வந்தது என்று சாதிப்பவர்களும்இருக்கத்தான் செய்கிறார்கள்! மற்ற மொழி பேசுபவர்கள் சொன்னாலும் 'பாவம், இவர்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று விட்டுவிடலாம். ஆனால் நம் தமிழர்களில் சிலர், வடமொழியிலிருந்துதான் தமிழ் வந்தது என்று கூசாமல் சொல்லும்பொழுது நம்முடைய மனம் புண்படாமல் இருக்க முடியாது. தமிழின் தொன்மை வரலாற்றைப் படித்திருந்தும் இவ்வாறு தாழ்த்திச் சொல்லுவது, வியப்பாகவல்லவா இருக்கிறது? இப்படிப்பட்டவர்களும் இந்த இருபதாம் நூற்றாண்டில் இருக்கிறார்களே என்று எண்ணும் பொழுது உள்ளம் குமுறத்தான் செய்கிறது! அவர்களுக் கெல்லாம் பரிதிமாற் கலைஞன் (வி. கே. சூரியநாராயண சாஸ்திரி) அவர்கள் சொல்லியதை பதிலாகப் படைக்கிறேன்!

"வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களை யுணர்ந்து அவற்றிற் கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் ஆன்ம நூற்பயிற்சி மிக்குடையாராயினும் கலையுணர்ச்சி சாற்றவராயுமிருந்தமை பற்றி தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர் தமிழர்களிடத்தில்லாத அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகை சாதிமுறையை மெல்ல மெல்ல நாட்டிவிட்டனர்........... இன்னும் அவர்புத்தி நலங் காட்டித் தமிழர்களிடம் அமைச்சர்களெனவும், மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமர்ந்து கொண்டனர். தமிழர்களிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும் வட மொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்!"

ஆரிய மொழியான சமஸ்கிருதத்திலே மிகுந்த பற்றுள்ளவரான (சூரிய நாராயண சாஸ்திரி)பரிதிமாற் கலைஞரே இவ்வாறு சொல்லியிருக்கும்பொழுது மற்றவர்கள் சொல்லுவதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? ஏனென்றால் அவர் வடமொழியையும் தமிழையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தவர்-ஆரிய மொழியைப் பேணியவர்-என்றாலும் உண்மையை மறைத்துப் பேச அவரால் முடியவில்லை!

திருக்குறள், சிந்தாமணி, சங்க இலக்கியம்போன்ற நூல்களைப் படிப்பவர்கள் வடமொழியிலிருந்து தமிழ் உண்டாகவில்லை என்பதை உணர்வார்கள். திருக்குறளிலும் சிந்தாமணியிலும் வடமொழிச் சொற்கள் கலக்கவில்லை! தூய தமிழ்ச் சொற்களால் அவைகள் இயற்றப்பட்டிருக்கின்றன. தனித் தமிழில் நூல்கள் எழுதமுடியும் என்றும், வட மொழியிலிருந்து அவைகள் இயற்றவில்லை என்றும் தெளிவு பெருதவர்கள் உணர்வார்களாக கால்டுவெல் சொல்லியிருப்பதையும் அவர்கள் பார்க்க வேண்டும்!

"திராவிட மொழிகளின் இலக்கணங்களை கவனமாகப் படிப்பவர்கள் சமஸ்கிருதத்தினின்றும், அல்லது மறுவியேனும் அல்லது வேறு விதமாகவேனும் சிதைந்து வந்திருக்குமென்று நினைக்க மாட்டார்கள்"

வியாபார நிமித்தமாய் அயல் நாட்டினர் நம் நாட்டிற்கு வந்து போயிருக்கிறார்கள். யானைத் தந்தம். தோகை, குரங்கு முதலிய பொருள்களை நம் நாட்டிலிருந்து அவர்கள் வாங்கிச் சென்றிருக்கின்றனர். அவர்கள் ஆரம்பத்தில் தமிழ் மொழியைப் பேசச் சிறிது சிரமப்பட்டிருந்தாலும் பிறகு பேசக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒருவனுடைய வாழ்க்கைக்கு 200 அல்லது300 வார்த்தைகள் தெரிந்தால் போதும்! அவற்றை வைத்துக்கொண்டு பேசலாம்-கடையில் போய்ச் சாமான்கள் வாங்கலாம்! நம் நாட்டிற்கு வந்த மேனாட்டினரும் இந்த 200, 300 வார்த்தைகளை வைத்துக்கொண்டு வியாபாரம் நடத்தியிருக்கிறார்கள்! வளம் அடையாத தங்களுடைய மொழியை-பேச்சு வழக்கில் மட்டுமே இருந்த தங்களுடைய மொழியை நம்மிடம் கற்ற வார்த்தைகளை வைத்துக்கொண்டு அவர்களுடைய மொழியை உருவாக்கினர்-பிற்பாடு இலக்கியம் செய்தனர்-இலக்கணம் யாத்தனர்! இதிலிருந்து உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி நம் தமிழ்மொழி என்பதை யாரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. மற்ற மொழிகளுக்கு மூலவேர் தமிழ்தான் என்பதை. அம்மொழிகளில் காணப்படும் ஏராளமான தமிழ்ச் சொற்களிலிருந்து எளிதில் புரிந்து கொள்ளலாம்.

சமஸ்கிருதத்தில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்:—

அக்கா, அத்தா, அடவி, காவேரி, ஆணி, அம்பா, அம்மா அடே, ஆனி, கடு, கலை, போன்ற அறுபதுக்கு மேற்பட்ட சொற்கள் சமஸ்கிருதத்தில் காணப்படுகின்றன!

ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் தமிழ்ச் சொற்கள்:—அசை, அருவி, அலை, அவா, ஔவை, ஆவி, இழு, இரும்பு. ஈனு, உயர், எரி, உழு, உளை, எய், எழு, ஓரம், செய்போன்ற நூற்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஐரோப்பிய மொழிகளில் காணப்படுகின்றன.

எபிரேய முதலிய மொழிகளில் காணப்படும் தமிழ்ச் சொற்கள் :- அப்பா, அம்மா, ஆறு, அல், அவா, இரு இறங்கு, ஏரி, ஊர், எறி, எரு, கூர், சாக்கு, சால், சினம்போன்ற ஏராளமான சொற்கள் இருக்கின்றன.

சித்திய மொழியிலுள்ள தமிழ்ச் சொற்கள் :-

அக்க, அத்தன், ஆத்தன், அன்னை அப்பன், அம்மாள், அலை. ஆறு, கத்தி கரடி. கோ, கோழி, புகை பழமை, வாழ் போன்ற பல சொற்கள் காணப்படுகின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

திரு. ப. புகழேந்தி, திருமதி. சுகுணகமலவல்லி இவர்களின் பதிவுத் திருமணம் நாகர் கோயிலில் நடைபெற்றது.
வாழ்க! மணமக்கள்!

பொதுச் செயலாளர் அண்ணா-சம்பத் அறிக்கைகள்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் குழப்ப நிலையும், பிளவுப் போக்கும், வேலூர் பொதுக் குழுவைத் தொடர்ந்து ஏற்பட்டு, தமிழக மக்களின் மனதில் பெரும் அதிர்ச்சியை மூட்டி விட்டிருப்பதை அனைவரும் அறிவர்.

மேல் மட்டத்தில் இருந்து கிளைகள் வரையில் இந்தப் பிளவு விரிவடைந்து பரவவேண்டும் என்று மாற்றுக் கட்சியினர் விரும்புவதை கழகத்தோழர்கள் உணர்ந்து, பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டியது அவர்தம் தலையாய கடமையாகும். கருத்து வேற்றுமைகள் எழுவது இயற்கை - வரவேற்கத் தக்கதுமாகும்.

ஆனால், அவைகளை விவாதித்து முடிவுகாணத் தக்க பொறுப்புணர்ச்சியுடன், நமது நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். வெறுப்புணர்ச்சி தலைதூக்குவதும், பலாத்காரச் சூழ்நிலையை மூட்டிவிடுவதும், திட்டமிடுவதும், வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

பொதுக்குழு கூடு முன்பே பலர் வன்முறையில் பேசியும், செயல்பட்டும், திட்டமிட்டும், நடந்துகொண்டதாகக் கேள்விப்பட்டு மொத்த வேதனைப்படுகிறேன்.

அத்தகைய தீயசக்திகளைக் கண்டிப்பது என் கடமை. தோன்றாமல் இருக்கச் செய்வதும் — அழித்தொழிப்பதும் கழகத் தோழர்களின் கடமை. தோழர் சம்பத், தனக்கெதிராக இத்தகைய வன்முறை திரட்டப்பட்டதாக கூறியது கேட்டு நான் வேதனைப்படுவதுடன், எவர் இத்தகு தீயசெயலில் ஈடுபட்டு இருப்பினும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நம்முடைய நடவடிக்கைகள் எதிலும் இனி இத்தகைய முறை தலை தூக்க இடமளிக்கக் கூடாது என்று கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்வதுடன், உறுதியான நடவடிக்கைகள் மூலம் இத்தகைய நிலைமை ஏற்படாதபடி தடுக்க உறுதி கொண்டுள்ளேன் என்பதையும் அறிவித்துக்கொள்கிறேன்.

கருத்து வேற்றுமைகள், கழகச் செயல் முறைபற்றியோ, கொள்கைபற்றியோ, என் பேச்சு, எழுத்து பற்றியோகூட ஏற்படுமானால், அவைபற்றி நமது அமைப்புகளில் கூடிக் கலந்து பேசுவதுதான் இனி மேற்கொள்ள வேண்டிய முறையே தவிர, கட்டுரைகள், அறிக்கைகள் மூலமும் பேதமும் கசப்பும் ஏற்படுத்தத் தக்க விதமான போக்கில் இனி எவரும் நடந்து கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய முறைகளை மேற்கொள்வது கழகத்திற்கு ஊறு ஏற்படுத்தத்தக்க கசப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதால் இதனைக் கூறுகிறேன்.

ஆங்காங்கு ஏற்படும் கருத்து வேற்றுமைகள், பிளவுக்கு வழியமைக்கும் அளவுக்குப் பேச்சுகள் நடைபெறுவதும் இனி தவிர்க்கப்பட்டு, கழகத்தின் கண்ணியமும் கட்டுப்பாடும் காப்பாற்றப்படத்தக்க முறையில் என்னுடன் ஒத்துழைக்கும்படி அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

அண்ணாத்துரை

வேலூர் பொதுக்குழு செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகளுக்குப்பின், கழகத் தோழர்களிடையே ஏற்பட்டுள்ள குழப்பமான நிலை, கழகத்தில் உள்ள பொறுப்புள்ள அனைவருக்குமே பெருத்த வேதனையை அளித்து வருகிறது.

12 ஆண்டுகளாகப் பலவகையான போராட்டங்களில் ஈடுபட்டும், நமது அருமைத் தோழர்கள் பலரைப் பலி கொடுத்தும், தியாகங்கள் பல செய்தும் வளர்ந்தது நமது கழகம்.

ஆனால், அண்மையில் கழகத்தில் உள்ள நம்மில் சிலர் மேற்கொள்ள நேரிட்ட பல நிலைகள், கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு ஊறு தேடுவதாய் அமைந்து விட்டன.

என்னைப் பொறுத்தவரை, கழகத்தின் பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் எழுதிய 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற தொடர் கட்டுரை ஜனநாயகத்தைப் பழிப்பதாகவும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டு கழக நடப்பில் அத்தன்மை மென்மேலும் கூடுதல் வேண்டும் என்ற கருத்துக் கொண்ட என்னைத் தாக்குவதாகவும் அமைந்ததென்ற கருத்தில் அதற்குப் பதிலாக நான் 'அண்ணாவின் மன்னன்' என்ற ஒரு கட்டுரைமூலம் எனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தேன்.

கழகத்தில் அண்ணா அவர்களும், நானும், மிக முக்கியமான பொறுப்புகளை வகித்து வரும் நிலையில், இவ்விரு கட்டுரைகளும் எங்கள் இருவருக்கிடையே பலத்த கருத்து வேறுபாடு எழுந்த நிலையை வெளிப்படுத்தி, கழகத் தோழர்களிடையே குழப்பத்தையும் பலரிடையே மனக் கசப்பையும் உண்டாக்கிவிட்டன.

பின்னர் அண்ணா அவர்கள், தனது கட்டுரைகள் துளியும் ஜனநாயகத்தைப் பழிக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை அல்ல என்றும், என்னைக் குறிப்பாகத் தாக்கும் எண்ணம் கிஞ்சித்தும் இல்லை எனக் கூறியபின், அதனை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். ஏற்றுக்கொண்ட நிலையில் 'அண்ணாவின் மன்னன்' வெளி வந்தமைக்கும், அதன் காரணமாக கழகத் தோழர்களிடையே மனக் குழப்பம் ஏற்பட்டமைக்கும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களில் தென்பட்ட வன்முறைத் திட்டங்களையும் அவற்றிற்கு காரணமானவர்களையும் பொதுச் செயலாளர் கண்டித்திருப்பதையும் இனி அத்தகைய வன்முறை எண்ணம் கழகத்தின் எந்த மட்டத்திலும் தலைதூக்கா வண்ணம் கழகத் தோழர்கள் விழிப்போடும் உறுதியோடும் நடந்துகொள்ள வேண்டும் என்றும்; அவர் விடுத்திருக்கிற அறிக்கையினைப் பெரிதும் பாராட்டி வரவேற்கின்றேன்.

வேலூர் நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் நிலையை விளக்கி இரு தரப்புகளிலும் விடப்பட்ட அறிக்கைகளில் பேசப்பட்ட பேச்சுக்கள், எழுத்துக்கள், அனைத்தும் இத்தோடு முடிந்து, கழகத்தில் பழைய சூழ்நிலை மீளவும், தோழமை மலரவும், நாம் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாகப் பாடுபடுவோமாக.

கழகக் கட்டுக்கோப்பே குலையும் நிலை ஏற்பட்டு, நம்மை எல்லாம் துயரத்தில் ஆழ்த்திய நிலை மாறி மீண்டும் புது ஆர்வத்தோடு அனைவரும் ஒன்று சேர்ந்து கழக இலட்சியங்களுக்காகப் பாடுபடும் நல்ல சூழ்நிலை உருவாகிறது.

இவ்வேதனையான நிலைக்கு கழகத்தை ஆட்படுத்தியதில் எனக்கும் ஒரு பங்கு ஏற்பட்டு விட்டதை எண்ணி வருந்துகின்றேன்.

நாமனைவரும் பெரிதும் போற்றியும், மதித்தும், நமது தலைவராகக் கொண்டுள்ள அண்ணா அவர்களது தலைமையில் நமது கழகம் புதிய வலிவினைப் பெற்றுத் திகழும். கழகத்தின் அரசியல் எதிரிகள் ஏமாற்றம் அடையத் தக்க வகையில், நமது ஒற்றுமை பலமான அடிப்படையில் கட்டப்படுகிறது.

அண்ணா அவர்களது சீரிய தலைமையில் நாமனைவரும்ஒன்றுபட்டு, கழகத்தின் வெற்றிக்கும் பெருமைக்கும் தோழமை உணர்வோடு பாடுபடுவோமாக.

அன்பன்

ஈ. வி. கே. சம்பத்

திருமண அழைப்பு

அன்புடையீர்!

8-2-61ந் தேதி காலை 9 மணியளவில், நிர். 12. இராயபுரம் கல்மண்டபம், காவல் நிலையத்திற்கு எதிரிலுள்ள கட்டடத்தில். கவிஞர் கண்ணதாசன் அவர்கள் தலைமையின் கீழ் எங்கள் திருமணம் நடைபெறும்; நண்பர்களும் உறவினர்களும் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தரும்படிக் கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் வரவை விரும்பும்,

மணமகன் : கி, ஜானகிராமன்
மணமகள் : நவநீதம்

★

மணமகன் : பாலசுப்பிரமணியன்
மணமகள் : பங்கஜவல்லி

"வேலூரில் துவங்கிய வேதனை"

3-2-61 அன்று வெளியிடப்பட்டுள்ள, பொதுச் செயலாளர் அண்ணா, தோழர் சம்பத் இவர்களின் அறிக்கைகளினால் "வேலூரில் துவங்கிய வேதனை" இத்துடன் முடிகிறது. அறிக்கை வருவதற்கு முன்னரே முதற் பக்கம் அச்சாகிவிட்டதை தவிர்க்க முடியவில்லை.

நெஞ்சு நிறைந்தது!

தமிழ்ப்பித்தன்

இரவு மணி எட்டிருக்கும். சாப்பாட்டை முடித்துவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார் நாகலிங்கம். அவரது மனைவி சொர்ணத்தம்மாள் கையில் வெற்றிலை பாக்குப் பெட்டியுடன், நடக்கமுடியாத படி அசைந்தசைந்து வந்துகொண்டிருந்தாள். நாகலிங்கத்திற்கு எதிரே இருந்த 'ஸ்டூலில்' வெற்றிலைப் பெட்டியை வைத்துவிட்டு, மிகவும் சிரமப்பட்டுத் தரையில் அமர்ந்தாள் அவள் பாவம் அந்த ஊதல் உடம்பு உட்காருவதற்குள் போதும் போதும் என்ருகிவிட்டது.

நாகலிங்கம் ஆவலுடன் வெற்றிலை பாக்குப் பெட்டியைத் திறந்து, பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து, பாக்கை எடுத்து அனுயாசமாக வாயில் போட்டுக்கொண்டார். அதற்குள் சொர்ணத்தம்மாள், வாசனைச் சுண்ணும்பை எடுத்து, துளிர் வெற்றிலையில் தடவி அதைச் சுருளாக்கிக்கொண்டிருந்தாள்.

பாக்கை நன்ருகக் கடித்து, மென்றுகொண்டிருந்த நாகலிங்கம் வெற்றிலைக்காகக் கையை நீட்டினர். மடித்து வைத்திருந்த வெற்றிலையுடன் அன்பையும் கலந்து கணவனுக்குக் கொடுத்தாள் சொர்ணத்தம்மாள். அவர்கள் இள வயதுத் தம்பதிகள் அல்லவென்ருலும், இள வயதுக்காரர்களைப் போலவே அன்பும் பரிவும் உடையவர்களாக இருந்தார்கள்.

இரண்டாவது வெற்றிலையில் சுண்ணும்பைத் தடவிக்கொண்டிருந்தாள் சொர்ணத்தம்மாள். அப்போது, எதிர் வீட்டிலிருந்து எழுந்த தாலாட்டுப் பாட்டு, காற்றில் மிதந்து வந்து சொர்ணத்தம்மாளின் காதுகளைத் தொட்டுக்கொண்டிருந்தது. அவ்வளவுதான், அடுத்த கணம் சொர்ணத்தம்மாளின் கண்களில் சோகம் மழையைப் பொழிய வைத்தது. ஆம்! அவள் கண்ணீர் விட ஆரம்பித்தாள்; ஒரு சில நிமிடங்களுக்குள் வாய்விட்டு அழவே தொடங்கிவிட்டாள். பாவம் நாகலிங்கம், அவரால் சமாதானம் செய்யக்கூட முடியவில்லை. அந்த அளவுக்கு, அழுகை, எல்லையை மீறிவிட்டது. நாகலிங்கத்துக்கு பயம்கூட வந்துவிட்டது. எங்கே, பக்கத்து வீட்டுக்காரர்கள், தான் சொர்ணத்தம்மாளுக்கு உதை கிதை கொடுப்பதாக எண்ணிவிடுவார்களோ என்ற அச்சம் வேறு அவர் மனத்தில் தோன்றிவிட்டது. உடனே மிகவும் சிரமப்பட்டு, "இந்தா பாரு! சொர்ணம்! நீ ஏன் இப்படி திடீர்னு அழ ஆரம்பிச்சுட்டே" என்ருர். சொர்ணத்தம்மாள் பதில் சொல்லவே இல்லை. மீண்டும் கோபத்துடன் "பதில் சொல்றியா. இல்லே நான் இந்த இடத்தை விட்டு இப்பவே போகட்டுமா?" என்று கேட்டார்.

சொர்ணத்தம்மாள் உடனே அழுகையைக் குறைத்துக்கொண்டு, "எதிர் வீட்டிலிருந்து தாலாட்டுக் கேக்குதே! அந்த மாதிரி நம்ம வீட்டுலே கேக்குமாங்கிற எண்ணம் வந்துச்சு! கூடவே அழுகையும் சேர்ந்து வந்திருச்சு" என்ருள்.

"பைத்தியமே! இனிமே நம்ம வீட்டுலே தாலாட்டுக் கேக்குறதுக்கு நியாயமே இல்லை!" என்ருர் நாகலிங்கம், தெளிவுடன்.

"ஏன் நியாயமில்லே! எனக்குத்தானே குழந்தை பிறக்காதுன்னு டாக்டர் சொன்னரு. நீங்க இன்னொரு கல்யாணம் செய்துக் கிட்டிங்கன்னு, அப்ப, கட்டாயம் இந்த வீட்டுலே குழந்தை பொறக்குமில்லே' என்று எதிர்க்கேள்வி போட்டாள்.

நாகலிங்கம் இதற்குப் பதில்சொல்லவில்லை; சிரித்தார். அவரது சிரிப்பு அவர் 'ஏகபத்தினி விரதர்' என்பதைத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

"என்னங்க! பதில் சொல்லுங்க! வேறே கல்யாணம் செய்துக்குங்க" என்ருள் மீண்டும்.

சொர்ணம் நீ பேசுறதுலே அர்த்தமே இல்லை! நம்ம செல்வத்துக் கெல்லாம் செல்வமா இருந்த அவன் என்னைக்கி இந்த வீட்டை விட்டு ஓடுனனே அன்னைக்கே என் மனசு நொந்து போச்சு. அவனுேட நம்ம இன்பமும் போச்சு! இதுதான் என்னுேட கொள்கை" உணர்ச்சி ததும்ப, கண்களில் நீர் மல்க இந்த வார்த்தைகளை உதிர்த்தார் நாகலிங்கம். இதைக் கேட்டதும் சொர்ணத்தம்மாளின் அழுகை அதிகரித்து விட்டது. அவளது சிந்தனை பதினைந்து வருடங்களுக்கு முந்திய நிகழ்ச்சிகளை நினைவு படுத்திப் பார்க்க ஆரம்பித்தது.

நாகலிங்கத்தின் தகப்பனர் நல்லசிவம் நாகலிங்கத்தை விட்டுவிட்டு இளவயதிலேயே மடிந்து விட்டார். அனுதை நாகலிங்கத்தை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, அவனது சிற்றப்பா சிவக் கொழுந்துவைச் சேர்ந்து விட்டது.

சிவக்கொழுந்து ஒன்றும் பிரமாதமான வசதியில் இல்லாவிட்டாலும் உறவினர்களை உபசரிக்கும் விஷயத்தில் தாழ்வாக இருக்கவில்லை, நாகலிங்கத்தை நன்ருகப் படிக்க வைத்தார். நல்ல இடத்தில் பெண்பார்த்து, தன் சொந்தச் செலவில் மணம் செய்து வைத்தார். பொதுவாக அண்ணனின் மகனுக்கு யாரும் அவ்வளவு சிறப்பாகத் திருமணம் செய்து வைக்க மாட்டார்கள்; "சிவக்கொழுந்து இல்லாவிட்டால் நாகலிங்கத்துக்குக் கல்யாணமே நடந்திராது' என்று அவரது உறவினர்கள் பேசிக் கொள்வார்கள். உண்மையும் அதுதான். அதனுல்தானே என்னவோ நாகலிங்கம், சிற்றப்பா தனக்குச் செய்த நன்மைகளை எண்ணி அவருக்கு நன்றி கூறிவந்தார்; தனக்கு வாழ்வளித்த தெய்வம் என்று அவரைத் துதித்தார்.

சொர்ணமும் நாகலிங்கமும் சென்னையில் சுகமாக வாழ்க்கை நடத்தி வந்தனர்? அவர்களது வீட்டில் இன்பத்தின் முத்திரை எழில் நடம்புரிந்து வந்தது. துன்பம் அங்கே நுழைய முடியாமல், அக்கம் பக்கத்தாரை நாடிச் சென்றுவிட்டது,

வருடங்கள் ஓடின; இலை உதிர்ந்த மரங்கள் மீண்டும் இலைகளை உற்பத்தி செய்தன. குப்பை மேடுகள் கோபுரங்களாக மாறிக்கொண்டிருந்தது. ஆனுல் சொர்ணத்தின் வாழ்வு ஒரே பகலாகவோ, ஒரே இரவாகவோதான் காட்சியளித்தது! ஆம்! திருமணம் ஆகி ஐந்து ஆண்டுகள் முடிந்தும், குழந்தை பிறக்காததுதான் சொர்ணத்தின் துயரத்துக்குக் காரணம். முதல் வருடம் பிறக்கும், இரண்டாம் வருடம் பிறக்கும் மூன்ரும் வருடம் பிறக்கும் என்று நம்பிக்கையின் அடிப்படையில் காலத்தைக் கழித்தாள், பாவம். வருடந்தான் பிறந்ததே தவிர, குழந்தை பிறக்கவில்லை. பார்க்காத வைத்தியம் இல்லை! சாப்பிடாத தீர்த்தம் இல்லை! போகாத தலங்கள் இல்லை; யாவும் சொர்ணத்தின் ஏக்கத்தைப் போக்குவதற்குப் பயன்படவில்லை.

மணமான மறு வருடமே குழந்தையைப் பெற்றெடுக்கும் மங்கையர்க்கரசிகள் அதிகமாக இருக்கும் இந்த நாட்டில், பாவம் சொர்ணம் மட்டும் அந்த உண்மையை உடைத்தெறியும் உன்னதப் பிறவியாக இருந்தாள்; அவள் தனது நிலையை எண்ணிப் புழுங்காத நாள் இல்லை. நாகலிங்கமும் மனம் வருந்தக்கூடியவன்தான் என்ருலும் சொர்ணத்தை ஆறுதல்படுத்தக் கூடிய விஷயத்தில் அவனது நெஞ்சம் வலுப்பெற்றிருந்தது! தினசரி, சொர்ணம் வருந்துவதும், நாகலிங்கம் ஆறுதல் சொல்வதும் அவர்களது அன்ருட கடமைகளாகிவிட்டன.

வாழ்க்கை வண்டி மந்தமான சூழ்நிலையில் போய்க்கொண்டிருக்கும்போதுதான் திடீரென்று ஒரு நாள் நாகலிங்கத்தின் சிற்றப்பாவுக்கு அபாயம் என்று தந்தி வந்தது. மனைவியையும் அழைத்துக்கொண்டு திருச்சி போனுன் நாகலிங்கம். எதிர்பாராத விபத்தின் காரணமாக சிவக்கொழுந்து அடிபட்டு, படுக்கையில் கிடந்தார். அவரது உயிர் இப்பொழுதோ, எப்பொழுதோ என்ற நிலையில் ஊசலாடிக்கொண்டிருந்தது. உயிர் விடுவதற்கு முன்பு, சிவக்கொழுந்து, பத்து வயது நிரம்பிய தன் ஒரே மகன் சோமசுந்தரத்தை நாகலிங்கம்-சொர்ணம் தம்பதிகளிடம் ஒப்படைத்து, அவனைப் பாதுகாத்துப் படிக்கவைக்கவேண்டும் என்றுகேட்டுக் கொண்டார். நாகலிங்கம் 'சரி' என்று உறுதிமொழி தந்தபின்தான் சிவக்கொழுந்தின் ஜீவன் ஓய்ந்தது.

துயரத்தை நெஞ்சில் அடக்கிக்கொண்டு, தம்பி சோமுவையும் அழைத்துக்கொண்டு, சென்னைக்கு வந்து சேர்ந்தான் நாகலிங்கம். சொர்ணத்துக்கு சோமுவின் மேல் அபாரப் பிரியம் இருந்தது. அவனை தன் கணவனின் தம்பி என்று சொல்லிக் கொள்ளவில்லை; தன் தம்பி என்ற எண்ணத்துடனேயே நடத்தி வந்தாள். குழந்தை இல்லாத குறையைக்கூட மறக்கச் செய்தது சோமுவின் வேடிக்கைப் பேச்சு. சிறு வயதிலேயே தாயை இழந்து, தந்தையின் அணைப்பிலே வாழ்ந்து வந்தவன் என்ற காரணத்தினுல், தனது அண்ணியை, தாயாகவே எண்ணி மதித்து வந்தது அந்தப்பிஞ்சு உள்ளம்.

நாகலிங்கத்தின் மனத்திலே கூட, சோமுவுக்குத் தனி இடம் இருந்தது. சோமு வந்த பின்னர் அந்த வீடே இன்பத்தில் ஆழ்ந்தது. அதிலும், தன் மனைவி, சோமுவிடம் பிரியமாக இருப்பது நாகலிங்கத்துக்கு மிகவும் திருப்தியாகவே இருந்தது. சிற்றப்பாவிடம் உறுதிமொழி கொடுத்து சோமுவைத் தன் வீட்டுக்கு அழைத்துவரும்போது நாகலிங்கம் சந்தேகப் பட்டதுண்டு, தன் மனைவி 'அவனை எப்படி நடத்துவாளோ என்ற அவனது சந்தேகம் வீணனது என்பதை நிருபித்தாள் சொர்ணம்.

பள்ளி செல்லும் சோமுவுக்கு, தினமும் தலைவாரி, பொட்டு வைத்து அனுப்புவதில் ஈடில்லாத மகிழ்ச்சி கொண்டாள் சொர்ணம். அவன் "அண்ணி' என்று அழைப்பது அவள் காதில் "அம்மா" என்று அழைப்பதாகவே பட்டது.

எந்த இன்பமும் நெடுநாட்கள் நிலைத்திருப்பதில்லை என்ற தத்துவத்தை மெய்ப்பிக்கின்ற விதத்தில் சில நிகழ்ச்சிகள் நாகலிங்கத்தின் வீட்டில் நடைபெற ஆரம்பித்தன.

சொர்ணத்தின் தங்கை தாரா தன் கணவனுக்கு வைத்தியம் பார்க்க, சென்னைக்கு வந்தாள். அக்காள் வீடு இருக்கும்போது, அவளுக்கு என்ன கவலை? எந்தவிதக் கூச்சமும் இன்றி, தாரா, தன் கணவனுடனும் குழந்தைகளுடனும் அக்காள் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

நாகலிங்கம் பொதுவாக நல்லவன்தான் என்ருலும் தாரா, அவள் கணவன், குழந்தைகள் ஆகியோரின் வருகையை அவன் மனத்துக்குள் வெறுத்துக் கொண்டிருந்தான். தாராவின் கணவனுக்கு வேலை எதுவும் கிடையாது என்பதும், அவன் ஊர் சுற்றி என்பதும் ஆகவே அவனிடம் காலணுக் காசு கூடக் கிடையாது என்பதும் நாகலிங்கத்துக்கு நன்ருகத் தெரியும். இந்த நிலையில் வைத்தியம் பார்க்க சென்னைக்கு வந்திருக்கிருர்களென்ருல், வைத்தயச் செலவு தன் தலையில்தான் விழுந்திருக்கிறது என்பதும் அவனுக்கு நன்ருகப் புரிந்தது.

தாராவின் கணவனை அரசினரின் இலவசமருத்துவ மனையில், சிரமப்பட்டு சிபாரிசுகளின் உதவியினுல் சேர்த்துவிட்டான் நாகலிங்கம்.

தாராவை, இதற்கு முன்பு பார்த்திராத காரணத்தால் சோமு அவளிடம் நெருங்கவில்லை. ஆனுல் தாரா சோமு தன்னைப் பாராமுகம் செய்வதாக எண்ணிக் கொண்டாள். அவள் நெஞ்சம் வெந்து கொண்டிருந்தது. கோபம் கண்களிலிருந்து குதித்துக் கொண்டிருந்தது.

வந்து ஒரு வாரம் வரைதான் தாரா சும்மா இருந்தாள். அதன் பிறகு அவளால் சும்மா இருக்க முடியவில்லை. சோமுவிடம், தன் அக்காளும் அவள் கணவனும் அன்பைப் பொழிவதை அவளால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. தன் குழந்தைகளை அவர்கள் அழைப்பதில்லை என்பதையும் கண்டாள்; அவள் நெஞ்சத்தில் பொருமை துளிர்விட ஆரம்பித்தது. அதிலும் சோமு தன்னைப் பாராமுகம் செய்வதாக எண்ணிக் கொண்டும் இருந்ததால் அவனை எப்படியும் தன் அக்காளின் வீட்டிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமாக இருந்தாள். நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்தாரா.

ஒரு நாள் மாலைநேரம். அலுவலகத்திற்குச் சென்றிருந்த நாகலிங்கம் வரவேண்டிய நேரத்தில் வரவில்லை. சோமுவும் விளையாடச் சென்றுவிட்டான். இந்த நேரத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள் தாரா, தன் அக்காளிடம்,

"அக்கா! சோமு மேலே நீ இவ்வளவு பிரியமாக இருக்கிருயே, அவன் பெரியவனுகி நல்லது செய்வான்னு நென்க்கிறியா!"

— 10-ம் பக்கம் பார்க்க —

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிந்த சொற்கள் :-

தமிழ்ச் சொற்கள் பல இடங்களில் பலவாறு உச்சரிக்கப் படுகின்றன. இன்று வட ஆற்காடு மாவட்டத்தில் ஒருவிதமாகவும், சேலத்தில் மற்றொரு விதமாகவும், திருநெல்வேலியில் மற்றொருவிதமாகவும் தமிழை உச்சரிக்கிறார்கள்! உதாரணமாக ''வாழைப் பழம்'' என்ற சொல்லை ஒரு இடத்தில் 'வாயப்பயம்' என்றும் மற்றொரு இடத்தில் 'வாளைப்பளம்' என்றும் உச்சரிக்கிறார்கள். இன்னும் சில வார்த்தைகளை அடியோடு மாற்றிப் பேசுகிறார்கள். 'இருக்கிறது' என்ற சொல்லை 'இக்கீது' என்று திரித்திப்பேசுகிறார்கள். இதைப் போல ஏராளமான தமிழ்ச் சொற்கள். மற்றமொழிகளில் திரிந்தும் மாற்றியும். வழங்கப்பட்டு வருகின்றன ! முதலிலும், இடையிலும், கடையிலும் சொற்கள் மாறி வழங்கப் பட்டு வந்தாலும். தமிழ்ச்சொற்கள் அவை என்று பார்த்த உடனே தெரிந்து கொள்ளலாம். அயல் மொழிகளில் எவ்வாறு திரிந்து தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன என்பதைப் பாருங்கள் :

அம்மா :- அம்மா என்ற சொல் சமஸ்கிருதத்தில் அம்மா என்றும். ஜெர்மன் மொழியில் அம்மா என்றும், ஆஸ்கனில் அம்மா என்றும், ஐஸ்லாண்டில் அம்மா (பாட்டி) என்றும், ஜெர்மன் மொழியில் அம்மே (Nurse) என்றும், சாமஸ்டி மொழியில் அம்மா என்றும், ஜெனீசிய மொழியில் அம், அம்மா என்றும், எஸ்ரியன் மொழியில் எம்மா என்றும், பினீசிய மொழியில் எமா என்றும், சிந்து மொழியில் அமா என்றும், மலைய மொழியில் அம என்றும், துளு மொழியில் அம்மே (அப்பா) அப்பே (அன்னை) என்றும், மங்கோலிய மொழியில் அமா (தந்தை) என்றும், எபிரேய மொழியில் ஏம், இம் என்றும், திபேத்தில் மா, மோ (பெண்) என்றும், சிரியா மொழியில் ஆமோ என்றும் வழங்கப் பட்டு வருகிறது.

அப்பா :- தெலுங்கு, கன்னட மொழிகளில் 'அப்பா' என்று அப்படியே வழங்கப் படுகின்றது. பூட்டான் மொழியில் அப்பா என்றும், போத்தியாவில் அபா என்றும், எபிரேயமொழியில் ஆப் என்றும், கல்தேய மொழியில் அப்பா என்றும், சிரியா மொழியில் ஆபோ என்றும், ஆரமேக் மொழியில் அப்பா என்றும், சிங்கள மொழியில் அப்பா என்றும் வழங்கப் பட்டு வருகிறது.

அக்காள்:—திராவிட மொழிகளில் அக்கா என்றால் மூத்த சகோதரி என்று பொருள். சமஸ்கிருதத்தில் அக்கா (தாய்) என்றும், மராட்டிய மொழியில் அகா என்றும், கூசியன் மொழியில் அக்கின் என்றும், மங்கோலிய மொழியில் அக்கான் என்றும், திபேத்தில் அக்கே என்றும், துருக்கியில் எகே என்றும், மார்டுவின் மொழியில் அகி என்றும், உக்ரெயினில் இக்கியன் என்றும், லேப்பிஸில் அக்கே (மனைவி) என்றும், மாங்கல் மொழியில் அகா என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

கோ, கோன் என்ற சொற்கள் அரசன் என்று பொருளைத் தமிழில் தருகிறது. இதே பொருளை துருக்கி மங்கோலிய மொழிகளிலும் தருகிறது. ஆனால் வார்த்தைகள் கான், காகான் என்று மாறுபட்டிருக்கின்றன. ஒஸ்டியாக் மொழியிலும், சீத்திய மொழியிலும் 'கோ என்று வழங்கப்படுகின்றது.

கொல் என்ற சொல் ரஷ்ய மொழியில் கொல்யு என்றும், ஆங்கிலத்தில் கில் என்றும், பினீசியாவில் கியோல் என்றும், மூரமிஸ் மொழியில் கோலம் என்றும். சிரஸானியா மொழியில் குலா என்றும், அங்கேரிய மொழியில் அல் என்றும், நார்வே மொழியில் கில்லா என்றும், டச்சு மொழியில் கொல்லன் என்றும் ஐஸ்லாண்டில் கொல்லா என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

குடி என்ற சொல் சமஸ்கிருதத்தில் படகு—டிறம் என்றும், பினீசியாவில் கோட்டா என்றும், சரமிஸ்ஸில் குடா என்றும், மார்டுவின் மொழியில் குடோ என்றும், ஒஸ்டியாக், சாக்சன் மொழிகளில் காட் என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

நீர் என்ற சொல் சமஸ்கிருதத்தில் நீரம் என்றும், காண்டில் நீர் என்றும், பிராகு மொழியில் டீர் என்றும், கிரேக்க மொழியில் நீரோ என்றும் வழங்கப்படுகிறது.

இன்னும் இதைப்போன்ற ஏராளமான சொற்கள் மற்ற மொழிகளில் காணப்படுகின்றன. இதிலிருந்து ஆதி மொழி தமிழ் என்றும், உலகத்தில் முதன் முதல் ஆண்ட மொழி என்றும், இதிலிருந்துதான் மற்ற மொழிகள் உண்டாகியிருக்கின்றன என்றும் நீங்கள் அறிந்துகொள்ளலாம். இயற்கை அன்னைஅருளியது இன்தமிழ் !-அதனால் தான் அது இன்றுவரை ஒரு சிறந்த மொழியாக மிளிர்கிறது.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள் நமக்கு ஆட்சி மொழியாக இருக்கத் தகுதியுடையது தனிப் புகழ்கொண்ட நம் தமிழா? அல்லது 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட இந்தி மொழியா?

★

விற்பனையாளர்களுக்கு அறிவிப்பு.

தென்றல், முல்லை இதழ்களின் பட்டியல் கிடைத்த ஒரு கிழமைக்குள் பாக்கியை அனுப்பாவிடில், இதழ்கள் அனுப்புவது அறிவிப்பின்றி நிறுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி.

வெளிவந்து விட்டது :

கண்ணதாசனின்
கட்டுரைகள், கதைகள், நாடகங்கள்.

பைந்தமிழ்ப் பதிப்பகத்தின்
முதல் வெளியீடு.

★ சித்தத்தில் ஒளிவீசும்
தத்துவக் கட்டுரைகள்.

★ வித்தகர்கள் பாராட்டும்
இலக்கியக் கட்டுரைகள்.

★ தித்திக்கும் தீஞ்சுவைசேர்
தேன்பாங்குச் சிறுகதைகள்.

★ சித்திரத்துத் தமிழ்வடிக்கும்
சிறப்புமிகு நாடகங்கள்.

இதுவரை நூல்வடிவமாக வெளிவராத எழுத்தோவியங்கள் அனைத்தும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

படிப்பகங்கள், நூலகங்கள், பைந்தமிழர் இல்லங்கள், கருத்தறியும் துடிப் புடையோர் கையில் எல்லாம் இருக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.

விலை ரூபாய் 2-50

பதிவுத் தபாலில் பெற விரும்புவோர் 75 காசுகள் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விற்பனையாளர்களுக்கு 25 சதவிதம் கழிவு உண்டு.

விற்பனை உரிமை :

தென்றல்
2/127. மவுண்ட்ரோடு,
சென்னை-6.

தொழிலும் குணமும்

"நிலத்தியல்பால் நீர் திரிந்
தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு
மறிவு"

"இயற்கையில் மழைநீருக்கு ஒரு நிறமும் சுவையும் இல்லாவிட்டாலும், அது விழுகிற மண்ணின் இயல்பிற்கேற்ப நிறமும் சுவையும் பெருகிறது" என்றார் வள்ளுவர்.

"செம்புலப் பெயல்
நீர்போல.........
அன்புடை நெஞ்சம்
தாங்கலந்தனவே"

என்ற சங்ககாலப் பாடலிலும் இந்தக் கருத்துச் சொல்லப்படுகிறது.

நம் நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களின் தொழில், அவரவர்க்குப் பிடித்த மானதுதானா? அல்லது அவரவர் திறமைக்கும் விருப்பத்திற்கும் ஏற்றதுதானா? என்று கேட்டால், 'இல்லை' என்ற விடையைத்தான் பலரும் பகர்வர். இப்படி ஒருவன் தன் விருப்பத்திற்கும், திறமைக்கும் ஏற்ற தொழிலை மேற்கொள்ளாது ஏதோ வயிற்றைக் கழுவ ஒரு தொழிலில் ஊடாடிக் கொண்டிருப்பானானால், அவனது முழு உழைப்பும், திறமையும், சக்தியும் பயன்படுவதில்லை. பெரும்பான்மை வீணாகிறது. "ஒருவன், தான் திட்டமிட்டு விரும்பிய தொழிலை வாழ்க்கையில் மேற்கொண்டால் அவனது எல்லா ஆற்றலும் திறமையும் பயன்படுகின்றன."

"If one chooses his plan of life, he employs all his faculties" என்றார் மில் என்ற 'மெய்ஞ்ஞானி'.

"இதனை இதனால் இவன்
முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்
கண்விடல்".

என்ற குறட்கருத்தும் இதற்கு ஒட்டி வரும்.

ஆனால் நாட்டின் ஏழ்மை நிலை காரணமாக ஒருவன் ஒரு தொழிலை மேற்கொண்டால் வேறு வழியின்றி அதிலேயே காலத்தைக் கழிக்க வேண்டி இருக்கிறது.

எப்படி ஒரு பெண்ணுக்கு, மணந்த பின் கணவனைப் பிடிக்க வில்லையானால், வேறு கதியின்றி மீதிநாளை அவனுடனேயே கழிக்க வேண்டி இருக்கிறதோ, அப்படித்தான் பல ஆண்கள் 'வாழ்க்கைப்பட்ட' தொழிலும் உளது. ஏதோ ஒருவர் இருவருக்குத்தான் தொழிலை மாற்றிக் கொள்ள பிறவசதிகள் உண்டு. ஆனால் அமெரிக்காவில், அடுத்த உத்தியோகம் என்ன என்பதைப் பற்றி நினைக்காமலேயே தான் இருக்கும் வேலையை உதறித் தள்ள (ராஜிநாமா கொடுக்க) முடியுமாம்.

ஒருவன் ஒரு தொழிலை மேற் கொள்ளும் துவக்கப் பருவத்தில், அவனது அறிவும் திறனும் வளரும் தன்மையை உடையன. சம்பளத்திற்காக வேலை செய்யும் எல்லாரும் அந்த வேலை செய்வதால் ஒரு அறிவையும், இதுவரை இல்லாத பயிற்சியையும், திறமையையும் பெறுகிறார்கள். புகை வண்டியை ஓட்டுபவரைப் போல், நெருப்பின் அருகில் மணிக்கணக்காக இருக்கப் பிறரால் இயலாது. சிறந்த மேடைப் பேச்சாளர் போல மணிக்கணக்காக மற்றவரால் பேசமுடியாது. நாட்டிய நங்கையர் போல, அத்தனை மணி நேரம், பழக்கமில்லாத அதே வயது குடும்பப் பெண்களால் ஆட முடியாது. மற்றும், மாந்தர்க்குக் "குணம் படியும் பருவம்" "Character Forming Age" என்று ஒன்று உண்டு. அது பெரும்பான்மை 25 வயதிற்கு முன்பாகும். தொழிலை மேற்கொள்ளும் காலமும், இந்தக் குணம் படியும் பருவமும் பலருக்கு ஒரே சமயத்தில் ஆகும் பின்னர், ஒரு பத்து ஆண்டுப் பழக்கத்திற்குப் பிறகு, மனிதன் அத் தொழில் தரும், அல்லது, அத்தொழில் தொடர்புடைய குணமுடையவனாகிறான். இதில் ஒன்றிரண்டு விதிவிலக்குகளும் உண்டு. ஆனால் பெரும்பான்மை முற்கூறியனவே.

எடுத்துக் காட்டாக, காவலர் துறை ஊழியர் (Police) தனது குழந்தையை வீட்டில் கொஞ்சும் போதும் "திருட்டுப் பையா-கே.டி. (K.D.) பயலே-உள்ள தள்றேன் பாரு" என்பதும் பள்ளி ஆசிரியப்பணி புரிபவர், மனைவியிடம் பேசினாலும், தன்னிலும் உயர்ந்தவரிடம் பேசினாலும் (அனைவரையும் மாணவராகக் கருதி) பேச்சுக்கு இடையே—"என்ன புரிகிறதா—சொல்வது தெரிகிறதா—விளங்குகிறதா" என்பது போலவும், பட்டாளத்தில் பணியாற்றியவர்கள் வீட்டாரிடத்தும், மற்ற வீட்டு அலுவல்களிலும் வளையாது மிடுக்குடன் நடப்பதும் 'தாட்-பூட்' என்று முரட்டுத்தனமாக நடப்பதும் கண்கூடு. இதுவரை கூறியவை—தொழில்தந்த, பிறர்க்குத் தீங்கிழையா — குணங்கள். ஆனால் பிறரை ஊறுபடுத்தும் 'தொழிற்குணங்களும்' பல உண்டு. மிக இழிந்த குணங்களும் உண்டு. இச்சகம் பேசுவதும் கையூட்டுப் (லஞ்சம்) பெறுவதற்குப் பிறரை துன்பத்தில் சிக்க வைப்பதும், சில தொழில்கள் தரும் குணங்களாம்.

வணிகத்துறையில் பொதுவாக உண்மையாக நடந்துகொள்ள முடியாது என்பது பலரும் அறிந்ததே, அத்துறையில் "பொய்யே மலர்ந்த திருமுகத்தார்" பலர். சமீபத்தில் ஒரு வணிகன் தனது சொந்தப் பெண்ணுக்கே, திருமணத்தின்போது பொன் நகைகள் எனப் பொய் கூறி, பித்தளையில் செய்து, பொன்மெருகு இட்டதைப் போட்டு ஏமாற்றினான். இது பிறகு அம்பலம் ஆயிற்று. இது அவன் தொழில் தந்த குணம்.

பலரின் வழக்குகளை ஆய்ந்து, நியாயத்தையே வழங்கிப் பழக்கப்பட்ட, மனுநீதிச் சோழன், தன் ஒரே மகனையே தேர்க்காலில் இட்டதும் கண்ணகியின் கணவனைக் கொன்றது கடுங்கோன்மை என்றுணர்ந்து, "கெடுக என் ஆயுள்" எனப் பாண்டியு மன்னன் மயங்கி வீழ்ந்ததும் அத்தொழில் அவர்க்குத் தந்த பெருங் குணங்கள்.

ஒரு தொழிலில் முதன் முதல் நுழையும் இளைஞன். தொழிலுக்காக ஓரிரு முறை மனத்திற்கு ஒவ்வாத சிலவற்றைச் செய்ய நேர்கிறது. பின்னர் அதையே பல முறை செய்யின், அது பழக்கமாகி விடுகிறது. நாளடைவில் அப்பழக்கம் அவனது குணமாகப் பதிந்து விடுகிறது.

ஒரு தொழில் ஒருவனது குணத்தை மாற்ற வல்லது என்பதால்தான், பண்டைய தமிழ் நூலில் ஆசிரியர் ஆவதற்குத் தகுதி இலக்கணம் கூறிய பவணந்தி, கீழ்க்கண்டவற்றைக் கூறினார் :—

"உயர்குடிப் பிறப்பு,, அருட்குணம், உயர்ந்த கொள்கை, பெருந்தன்மை, பல நூல் பயின்று பழகிய தேர்ச்சியும் தெளிவும், கேட்பார்க்கு எளிதில் புரியும்படி சொல்ல வல்ல சொல்வன்மை நிலம், மலை தராசுக்கோல், மலர்- இவைகளை ஒக்கின்ற தன்மை உலக அறிவும் உயர்ந்த குணமும்" அமையப் பெற்றவனே ஆசிரியத் தொழிலுக்கு உரியர் என்றார். இத்தகு குணங்கள் ஒருவரிடம் நிலைத்து இருக்க வேண்டும் என்றார் மற்றொருவர்.

"துலைநாவன்ன சமநிலை
உளப்பட
வேளாண்வாழ்க்கையும்
தாளாண்மையும்"......

அதாவது 'உலகினில் தொழில்கட்கெல்லாம் உயர்தொழில் உழவே' என்றார்.

பிறரை நம்பி வாழ்பவன் எப்போதும் ஒரு உறுதியற்ற பயந்த உள்ளத்துடன் வாழ்கிறான். அதனால் எல்லோரிடத்தும் தாழ்வுடன் நடந்து கொள்ளுகிறான், எப்போதும் பிறர் உழைப்பை உறிஞ்சி—தான் என்றும் உடலை வளைக்காது — பிழைப்பவன் உள்ளத்தில் வீரமும் உடலில் உரமும் நெஞ்சில் நேர்மையும் இரா. மானம் என்பது அவனுக்கு வெகு தொலைவு,

ஆனால் உழவு அங்ஙனம் அல்ல. தன் கையும், இயற்கை தந்த செல்வங்களாகிய மண், நீர், கதிரொளி காற்றும் தான் அவன் நம்பி இருப்பவை. இவை அவனை என்றும் வஞ்சிக்கா ஏமாற்றா, இல்லை என்னா. அதனால் அத்தொழில் உடையவன் வீணாக ஒருவரிடம் இச்சகம் பேசவோ, இழிவழி நடக்கவோ, கரவு உறையும் உள்ளத்தோடு (கபட மனம்) பழகவோ தேவை இல்லை.

இன்று வாழ்க்கையில் தொழிலை மேற்கொள்ளும் இளைஞரில் எத்தனை பேருக்கு ஒரு தொழிலினுடைய நன்மை தீமைகள் உள்ளபடி தெரியும்? அல்லது எத்தனை பேருக்குத் தன் திறமைக்கு உகந்த வேலை கிடைக்கிறது ?

தமிழில் சமையல் தொழில் போன்ற புதுத்துறைக்கெல்லாம் நூல்கள் மலிந்து விட்டன. ஆனால் "தொழில்களும் அவற்றில் உள்ள நன்மை தீமைகளும்" என்ற நூல்களோ, அல்லது இன்ன இன்ன போக்கும், திறமையும் உடையவர்க்கு இந்த இந்தத் தொழில் துறை பொருந்தும் என்றோ, பல துறையில் பல்லாண்டு பணிபுரிந்து, ஓய்வு பெற்ற, பழுத்த அனுபவம் உள்ள உத்தமர்கள் நிறைய எழுதக் காணோம், எழுதினால். எத்தனையோ இளைஞர்கள், ஒரு தொழிலில் நுழைந்து அல்லல்பட்டு 5 அல்லது 7 ஆண்டிற்குப் பின்னர் வெறுப்போடு புரிந்து கொள்ளுகிற அறிவை, முன்பே தெரிந்து கொண்டு, அத்தொழில் மேற்கொள்ளுவதை விலக்கி விடுவர். பொருத்திருந்து வேறு ஏற்ற தொழில் ஏற்று, ஏற்றம் அடைவர்.

மா. பொ. இராமச்சந்திரன், பி. ஏ.

கவிதைப் புரட்சி

வா. செ. பழநிசாமி எம். ஏ. பி. எல்.

முடிமன்னர் படைபோற்றி, அவர்தந்த கொடைபோற்றி
முனிவர் தங்கள்
அடிபோற்றி, அவர்செயலை ஆயிரமாய் விரித்தோதி,
ஆய்ந்து பார்க்கில்
படிவாழ்வு பகற்கனவு, பரலோகம் போற்றியெனப்
பாடித் தாழ்ந்தோம்.
குடிமக்கள் குறைபாட, சமுதாயக் கொடுமைகளைக்
கூற வாரீர் !
புற்றினிலே மழைநாளில் புறப்பட்ட ஈசலெனப்
பொய்யின் எல்லைக்
கற்பனையில் ஒருகோடிக் கதைபாடிக் காலத்தைக்
கழித்தல் நன்றோ ?
வற்கடத்தால் தொழில்புரிவோர் வாடுகிற நிலைகூறி
மனித வாழ்வைப்
பற்றியுள அறியாமை, பழங்கொள்கை தனைச்சாடிப்
பாட வாரீர் !
அண்டத்தை ஆய்ந்துணர அறிவுலகம் துடிக்கிறது;
அதற்கு ஐந்து
கண்டத்தைத் தாண்டிவெளி கடந்தேகி ஆய்கின்றார்;
கவலை யின்றி
"உண்டுண்டு றங்குவதே" உருவான முடிவென்று
ஓதி வாழ்தல்
பண்பாமோ ? பாவலரே ! பகுத்தறிவின் பாதைபுகழ்
பாட வாரீர் !
அறிவியலின் "அணு"யுகத்தை, அரசியலில் "குடியாட்சி"
அடைந்த வாழ்வை,
பொறியியலில் "வான்செலவை" பொருளியலில் "சமத்துவத்தை"
"வர்க்கப் போரை"
நெறியற்ற சமுதாய நெளிவகற்றிப் பெண்களுக்கு
நீதி வேண்டி,
வெறியற்ற சமயத்தை, இறையொன்றே யெனும்உணர்வை
விளக்க வாரீர் !

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"தாரா! இதென்ன இப்படிக் கேக்குறே! அவன் யாருன்னு தெரியாம நீ பேசுறே!"

"தெரியும்! ஒன் வீட்டுக் காரருக்கு சித்தப்பா மகன் தானே!"

"தாரா! கூடப் பிறந்தாத்தான் தம்பியா! சோமுமேலே நாங்க உயிரையே வச்சிருக்கோம். அவன் இந்த வீட்டுக்கு வந்ததுக்கப்புறம் தான் அவரு உத்தியோகம் கூட உயர்ந்துச்சு! நாங்க பிள்ளை பெறவில்லையே தவிர, சோமுவைப் பிள்ளையாகத்தான் நெனச்சுக்கிட்டு இருக்கோம்."

"என்ன இருந்தாலும் சொந்தப் புள்ளை ஆயிடுமா!',

"தாரா! இன்னொரு தடவை இந்த மாதிரிச் சொல்லாதே"

சொர்ணம் இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது அவள் உதடுகளில் உண்மையிலேயே கோபத்தின் துடிப்புகள் கொந்தளித்தன. தாரா பயந்து போய், வீட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டாள்; நல்ல இதயத்தில் நச்சு எண்ணத்தைப் பரப்ப முயன்ற அவளது முதல் முயற்சி தோல்வியுற்றது. இன்னொரு சந்தர்ப்பத்தை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்த நிலையில், சொர்ணத்தின் உடல் நாளுக்கு நாள் பெருக்க ஆரம்பித்தது. அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் கண்களில் சொர்ணத்தின் உருவம் படும்போதெல்லாம் அவர்கள் அதிசயத்தைக் கொட்டிக் கொண்டு நிற்பார்கள். "சொர்ணத்தின் வீட்டுக் காரருக்கு நல்ல சம்பாத்தியம்; அதனால்தான் அவள் உப்பிக் கொண்டே போகிறாள்" என்று சிலபெண்கள் விரிவுரை ஆற்றிக் கொண்டார்கள். சிலர், "ஆளைக் கண்டு மயங்காதே! ஊது காமாலை" என்று கேலி செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர், 'ஊதியம் பெருத்தால் உத்திரத்துக்கு ஆகாது" என்று தத்துவ உண்மைகளைக் களறிக் கொண்டிருந்தார்கள்; இன்னும் சிலர். "இது மலட்டுச சதை! இனிமேல் சொர்ணத்துக்குக் குழந்தை பிறக்காது" என்று ஆருடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலைமையைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு, குழந்தை பிறக்குமா, பிறக்காதா என்பதை ஜோசியரிடம் கேட்டுப் பார்க்கச் சொன்னாள் தாரா. சொர்ணத்துக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. காரணம், ஜோசியரிடத்தில் நம்பிக்கை இல்லை என்பதல்ல. தன் உடல் நிலையைத் தானே தெரிந்து வைத்திருந்ததுதான்! இருந்தாலும் தாராவின் விடாமுயற்சி, சொர்ணத்தை ஜோசியர் வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டது. நாலணுவைக் கொடுத்துவிட்டு நாலாயிரம் கற்பனைகளை வளர்த்துக்கொள்ள உதவி புரிவது ஜோசியம் ஒன்றுதான். பாவம், சொர்ணத்தின் மனத்தையும் அது அடிமைப்படுத்திவிட்டது. ஜோசியர், சொர்ணத்தின் ராசியை அலசிப் பார்த்துவிட்டு, குழந்தை பிறப்பதற்குரிய வாய்ப்பு இருப்பதாகச் சொன்னார். அது கேட்டு சொர்ணம் மகிழ்ச்சி அடைந்தாள். ஆனால், வீட்டிலே வளர்ந்து வரும் குழந்தையை வெளியேற்றினால் தான் சொர்ணத்துக்குக் குழந்தை பிறக்கும் என்று சொன்னார் அவர். விருந்து சாப்பிட எண்ணிச் சென்று, மருந்தைச் சாப்பிட நேர்ந்தது போல், வேதனையுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தாள் சொர்ணம். தனக்கென்று ஒரு குழந்தை தேவைதான் என்று சொல்லிக் கொண்டிருந்தது அவள் மனம். ஆனால்அதே நேரத்திலே சோமு தன்னிடம் உயிருக்குயிராக இருப்பதும் நினைவுக்கு வந்தது. அவனை எப்படி இந்த வீட்டை விட்டு அனுப்புவது? நினைக்கக்கூட முடியவில்லை அவளால்; குழப்பத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள் சொர்ணம். நாகலிங்கமும் சோமுவும் மகிழ்ச்சியுடன் வந்துகொண்டிருந்தார்கள். சோமுவின் முகத்திலே களிப்பும். நாகலிங்கத்தின் கண்களிலே பெருமையும் பொங்கி வழிந்தன.

"அண்ணீ! இங்கே பாருங்க புது டிரஸ்" என்றபடி அவள் அருகில் சென்றான் சோமு. அதைக் கண்டவுடன் சொர்ணத்தின் உள்ளம் மகிழ்ச்சியில் நனைந்தது. ஆனால், அதே நேரத்தில் ஜோசியரின் வார்த்தைகள் அவள் காதுகளில் எதிரொலித்தன. உடனே, தனக்கு ஒரு மகன் பிறந்து, அவனுக்கு இதுபோன்று புது ஆடைகள் வாங்கித் தந்து. அவன் தன்னை "அம்மா" என்று அழைத்து வந்தால் அந்தக் காட்சி எப்படி இருக்கும் என்று கற்பனை செய்ய ஆரம்பித்தாள். அவ்வளவுதான் அவள் வதனம் நெருப்பைக் கொட்ட ஆரம்பித்தது. அருகில் வந்து நின்ற சோமுவை வழக்கம்போல் அணைத்து அன்புரைகள் சொல்லவில்லை; வாய்மூடி மௌனியாகி நின்றாள். சோமுவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; நாகலிங்கத்துக்கும் சொர்ணத்தின் செயல், புரியாத புதிராக இருந்தது.

சில நாட்களுக்குள் தாராவின் கணவர் உடல் நிலை சுகம் பெறவே, தாரா கணவனுடன் ஊருக்குச் சென்று விட்டாள்; ஆனால், அவள் சொர்ணத்தின் நெஞ்ச வயலிலே தூவி விட்ட பொறாமை விதை. பயிராக முளைக்க ஆரம்பித்து விட்டது. சோமுவிடம் இருந்த பிரியம் மாயமாக மறைய ஆரம்பித்தது. எந்த நேரமும் அவனைக் கடிந்து பேசத் தலைப்பட்டாள். சோமுவுக்கு அண்ணியின் சுபாவத்தில் புகுந்து விட்ட மாற்றம் ஓரளவு புரிய ஆரம்பித்தது ஆனால் அதையாரிடம் சொல்ல முடியும்? அனாதையான அவனுக்கு யார் இருக்கிறார்கள்? உள்ளத்துக் குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

ஒரு நாள் மத்தியான நேரம். சோமு பள்ளிக் கூடத்திலிருந்து சாப்பாட்டுக்கு வந்தான். அந்தச் சமயத்தில் சொர்ணம் படுக்கையில் படுத்திருந்தாள். போர்வையைக் கொண்டு உடல் முழுவதையும் போர்த்திக் கொண்டிருந்தாள். அந்தக் காட்சியைக் கண்டவுடன் சோமுவின் இதயம் துடித்தது. "அண்ணிக்கு உடல் நிலை சரியில்லை போலிருக்கிறது. அதனால்தான் படுத்துவிட்டார்கள்' என்று எண்ணியபடி, அருகில் சென்று, "அண்ணீ' என்று அழைத்தான். பதில் இல்லை. மீண்டும் அழைத்தான். பதில் இல்லை. உறங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்ப நேரம் ஆகாது; ஆனால் உறங்குவது போல் பாசாங்கு செய்பவர்களை எழுப்பவே முடியாது. சொர்ணமும் பாசாங்கு தான் செய்து கொண்டிருந்தாள். அதைப் புரிந்து கொள்ள சோமுவுக்கு நேரம் பிடிக்கவில்லை. மேலே பறந்து திரிந்து கொண்டிருந்த ஈ ஒன்று அப்போது தான் சொர்ணத்தின் முக்கில் வந்து உட்கார்ந்து அவளுக்குத் தொல்லை கொடுத்தது கண்ணை விழித்துப் பார்த்து விட்டாள்; இனியும் ஏமாற்ற முடியாது என்று தெரிந்து கொண்டவள், "என்ன வேண்டும் சோமு!" என்று கேட்டாள்.

"சீக்கிரம் சாப்பிட்டுட்டு பள்ளிக் கூடம் போகனும் அண்ணீ"-

எனக்கு உடம்புக்குச் சரியில்லே! நீயே எடுத்துப் போட்டுச் சாப்பிட்டுட்டுப் போ!"

கடினமான குரலில் வெளிவந்தன இந்த வார்த்தைகள். சோமு அதற்கு மேல் அங்கே நிற்க வில்லை. அண்ணியின் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

அந்த நிகழ்ச்சியிலிருந்து தினந்தோறும், தானே தனக்குச் சாப்பாடு போட்டுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை சோமுவுக்கு ஏற்பட்டு விட்டது. அது தவிர வீட்டில் ஒரு சில சில்லறை வேலைகளையும் அவனே பார்க்க வேண்டிய பரிதாபமான நிலைமை வேறு உருவாகி விட்டது.

மாட்டுக்குப் பருத்திவிதை அரைத்து வைப்பது, கறந்த பாலை வாங்கிப் பத்திரமாக வைத்து விட்டு கன்றுக் குட்டியை இழுத்துக்கட்டுவது, அக்கம் பக்கத்திலுள்ள வாடிக்கைக் காரர்களுக்கு பாலை அளந்து கொடுப்பது, அதையெல்லாம் முடித்துவிட்டு வீட்டிலிருந்து இரண்டு மைல்தொலைவிலிருக்கும் ஒரு கிளப்புக்குப் பால்கொடுத்து விட்டுவருவது-இவை அவனதுஅன்றாட வேலைகளாகிவிட்டன. புத்தகங்களை மட்டுமே சுமந்து சென்ற சோமு, பால் செம்பு, பருத்தி விதை மூட்டை ஆகியவற்றைச் சுமக்கும் பேறு பெற்றான்! அவனுக்கு வாழ்க்கையே விரக்தியாகி விட்டது. கண்ணீர் வடிப்பதும் கதறி அழுவதும் அவனது அன்றாட கடமைகளாகிவிட்டன. கிளப்புக்குப் பால் சுமந்து செல்லும்போது, அழுதபடியே போவான். அவன் அவ்வாறு சென்றதற்குக் காரணம் இருக்கிறது. அந்தப் பாழும் பால்தான் அவன் வாழ்வின் திசையை மாற்றிவிட்டது.

ஒரு முறை சோமு பால் கொண்டு செல்லும்போது, எதிரே கண்ணை மூடிக்கொண்டு வந்த சைக்கிள்காரன் ஒருவன் அவன் மீது மோதிவிட்டான். அவ்வளவுதான், பால் செம்பு படாரென்று கீழே விழுந்தது; பால் முழுவதும் தரையில் ஓடிக்கொண்டிருந்தது. மண்மகள் அதை மனம் விரும்பிக் குடித்து மகிழ்ந்தாள். சைக்கிள்காரன் மன்னிப்பைக் கேட்டுக் கொண்டு, சாமர்த்தியமாக தன் பயணத்தைத் தொடர்ந்தான், பாவம் சோமு! அவன் நெஞ்சத்தில் பயம் படர ஆரம்பித்தது. தற்போதுள்ள சூழ்நிலையில், பாலைக் கொட்டிய குற்றத்திற்காக தனக்கு எவ்வளவு பெரிய தண்டனையைத் தன் அண்ணி தருவாளோ என்று அவன் நடுங்கினான். உடனே 'ஓ'வென்று அலறிவிட்டான். வீட்டை நோக்கி நடந்தான்.

மெதுவாக வீட்டுக்குள் அடி எடுத்து வைத்தான். அப்போதுதான் வந்திருந்த சவுக்கு விறகுகளை பரணில் அடுக்கிக்கொண்டிருந்தாள் சொர்ணம். விறகை எடுப்பதற்குத் திரும்பின சொர்ணத்தின் கண்களில் சோமுவின் உருவம்பட்டது. அவன் பாலைச் சீக்கிரம் கொடுத்துவிட்டு வந்ததை எண்ணித் திகைத்துக்கொண்டிருந்தாள். அதற்குள் சோமு, தொண்டையைக் கனைத்துக்கொண்டு, தயங்கியபடி, "அண்ணீ" என்றான். "என்ன" என்று ஓர் அலறல் சொர்ணத்தின் அடித் தொண்டையிலிருந்து உதிர்ந்து அந்த வீட்டையே ஒரு கலக்குக் கலக்கிக்கொண்டிருந்தது.

சோமு, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அண்ணீ! பாலு கொட்டிருச்சு அண்ணி" என்றான். உடனே சொர்ணத்தின் கையிலிருந்த விறகு, சோமுவின் முதுகில் நர்த்தனமிடத் தொடங்கியது!

"ஐயோ! அம்மா! ஐயோ! அப்பா! அடிக்காதீங்க அண்ணீ! அடிக்காதீங்க அண்ணீ!" என்று சோமு போட்ட கூச்சல் அந்தத் தெரு முழுதும் எதிரொலித்தது. கூட்டம் கூடிவிடுமோ என்ற பயத்தில் சொர்ணம் மேலும் அடிப்பதை நிறுத்திக்கொண்டாள்.

வீங்கிப் போன முதுகுடனும் துயர் தாங்கிப் போன மனத்துடனும் சோமு அவனது அறையில் சென்று படுத்துவிட்டான். 'நரகம் என்பது கட்டுக் கதை அல்ல, தான் அனுப்பவிப்பது தான் அது' என்று அந்தப் பிஞ்சு உள்ளம் முடிவு செய்துகொண்டது.

அன்று நாகலிங்கம் அலுவலகத்திலிருந்து திரும்பி வர இரவு நெடு நேரம் ஆகிவிட்டது. அவன் வந்ததும் சொர்ணத்தின் இதயம் படபடத்தது. சோமுவைத் தான் அடித்தது அவனுக்குத் தெரிந்து விட்டால் தன் நிலைமை ஆபத்தாகிவிடும் என்று அவள் உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)

1-3-61 முதல் வெளிவருகிறது.

சந்துமுனையிலே சிந்துபாடும் மந்த மதியினர் களுக்கு அறிவு புகட்ட!

காசுக்குக் கற்பைவிற்கும் காரிகைகளுக்கு, கற்பின் வலிமையை தெளிவு படுத்த!

துன்பத்தின் பிடியிலே துவண்டு கிடக்கும் ஏழைப் பாட்டாளி களின் துயர் துடைக்க!

"இன்பம்"

ஆசிரியர் : எழுத்துவேந்தன்

திங்கள் இருமுறை, விலை. 16 காசு.

இதுவும் பாண்டியன்பதிப்பக வெளியீடுதான். பிரதி ஒன்றுக்கு 50 காசு வீதம் முன்பணம் கட்டி இன்றே ஏஜண்டாகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

'இன்பம்'
கோதண்டராமன் கோயில் தெரு,
சென்னை-33.

எண்ணம்

தியாகன்

ஆதியிலே உலகம் சூனியமாக இருந்தது.

சூனிய உலகத்தை இருள்மட்டுமே சூழ்ந்திருந்தது.

ஆனாலும் அந்தச் சூனிய உலகத்தில் ஒருவர் இருந்தார்.

ஒரே ஒருவர் மட்டுமே இருந்தார்.

அவர், ஆவியாக இருந்து அங்கே அசைந்துகொண்டிருந்தார்.

அவர்தான், பாவிகளை இரட்சிக்க மனிதராக அவதரித்தார் என்று-மனிதர்களாகிய பாவிகளால் சொல்லப்படுகிற கடவுளாகிய ஏசு.

"ஒளியே உண்டாகக் கடவது" என்று அவர் ஆணையிட்டார்.

ஒளி துலங்கிற்று; இருள் விலகிற்று; உலகு வெளுத்திற்று.

"கடலே பொங்கக்கடவது" என்று கட்டளையிட்டார்.

கடல் பொங்கிற்று; அலை எழும்பிற்று; ஒலி கிளம்பிற்று.

"தாவர வர்க்கங்களே தழைக்கக் கடவது" என்றார்.

செடிகள் தழைத்தன; மலர்கள் மலர்ந்தன;

மரங்கள் வளர்ந்தன; கனிகள் சொரிந்தன.

"பிராணிகளே பெருகக் கடவது" என்றார்.

சிங்கங்கள் கர்ஜித்தன; யானைகள் பிளிறின;

திமிங்கலங்கள் நீந்தின; மான்கள் துள்ளின;

மயில்கள் ஆடின; குயில்கள் பாடின.

இப்படி ஐந்தே நாட்களில், உலகையும்-அதிலுள்ள அனைத்தையும் படைத்துவிட்ட சகல பரிபூரண அகண்ட தத்துவம் நிறைந்த சச்சிதானந்தப் பெருஞ்சுடராகிய தேவன்—

ஆறாவதுநாள் மனிதனைப் படைத்தார்.

எதையும் படைக்காத விதத்திலே அவனை மட்டும் படைத்தார்.

தனது சாயலாக அவனைப் படைத்தார்.

உலகின் முதல் மனிதனாகிய "ஆதாமை" 'எண்ண'ப் படைத்தார்; பேசப் படைத்தார்.

ஆதாமைப் படைத்த பிறகு, ஆண்டவன் எண்ணிப் பார்த்தார்.

ஆதாமுக்கு ஒரு துணையைப் படைக்க வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றிற்று.

சர்வ வல்லமை பொருந்திய தேவன், ஆதாமின்விலா எலும்புகளிலிருந்து ஒன்றை உருவி எடுத்தார்.

அந்த எலும்பைப் பெண்ணாக மாற்றினார்.

அவள்தான் உலகத்தின் முதற்பெண், "ஏவாள்."

உலகத்தின் முதற் பெண்தோன்றியதுமே - உலகத்தின் முதல் மனிதனின் "இடுப்பு" ஒடிந்தது.

மனிதனின் இடுப்பை ஒடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் தான், ஆண்டவன்பெண்ணையே படைத்தார் போலும்?

ஆறே நாட்களில் மனிதன் உட்பட உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்துவிட்ட ஆண்டவன், ஏழாவதுநாள்—

உலகத்தைப் படைத்த களைப்பிலே ஓய்வு பெற்றுவிட்டார்.

அதுதான் ஞாயிற்றுக்கிழமை.

இதுதான் உலகம் தோன்றிய விதம்.

இப்படித்தான் "பைபிள்" சொல்கிறது.

இப்படித்தான் இதை நம்புகிறவர்கள் எண்ணுகிறார்கள்.

மனிதனைப் படைத்ததோடு ஆண்டவனின் படைப்பு முடிந்தது.

ஆண்டவனோ, மனிதனை எண்ணம் படைத்தவனாகப் படைத்து விட்டார்.

மனிதனோ, அந்த எண்ணத்தால் ஆண்டவர்களையே படைக்கும் அளவுக்கு ஆற்றல் பெற்றுவிட்டான்.

மனிதன் எண்ணினான்-படைப்புக்கள் தோன்றின.

தன்னைப் பற்றி எண்ணியதால், மனிதன் படைப்புக்களைப் பற்றி எண்ணினான்.

படைப்புக்களைப் பற்றி அவன் எண்ண ஆரம்பித்ததுமே- தன்னைப் படைத்தது 'யாரென்ற எண்ணம் அவனுக்கு வந்து விட்டது.

அவன் எண்ண எண்ண, அவனுக்குக் குழப்பம் வளர்ந்தது.

குழப்பம் வளர வளர, அவனுக்கு எண்ணமும் வளர்ந்தது.

உலகைப் படைத்தவன் கடவுள்.

கடவுள்தான் உலகைப் படைத்தவனா?

படைப்பவன் இல்லாமல் படைப்புக்கள் உண்டாக முடியுமா?

கடவுள் மட்டும் 'தான்தோன்றி'யாக உண்டாயிருக்க இயலுமா?

கண்டிப்பாக கடவுள் என்பவன் ஒருவன் உண்டு.

உறுதியாக ஒருவன் மட்டும் கடவுளாக இருக்கமுடியாது.

ஒன்றுமே இல்லாது ஒன்று தோன்றமுடியாதே?

ஒன்றிலிருந்து மட்டுமே ஒன்று தோன்றமுடியாதே.

என்ன—?

கையும் கையும் சேர்ந்தால் அல்லவா ஓசை கிளம்புகிறது?

ஆமாம்.

காரும் காற்றும் மோதினாலல்லவா மழை பெய்கிறது?

ஆமாம்.

நேரும்—எதிரும் (Positive+Negative) கூடினால் அல்லவா ஒளி உண்டாகிறது?

ஆமாம்.

உலகைப் படைத்தது கடவுளென்றால், அது ஒன்றாகத் தனித்து நின்று உற்பத்தி செய்திருக்க முடியாதே?

ஆமாம்.

என்றால், கடவுள் என்பவன் ஒருவனில்லையா?

அவன் ஒருவனாக இருக்க வழியில்லையே!

பிறகு?

முடிவில்லாத எண்ணங்களிலிருந்து தெளிவில்லாத முடிவுகள் பிறந்தன.

கடவுள்தான் உலகைப் படைத்தவனென்றால், உலகை உண்டாக்க வேண்டுமென்று அவன் முதலில் எண்ணியிருக்க வேண்டும்.

அவன் எண்ணிய பின்னரே உலகு உண்டாயிருக்கவேண்டும்.

என்றால் - உலகம் பிறக்கு முன்னரே பிறந்தது எண்ணம்.

மனிதன்தான் கடவுளைப் படைத்தவனென்றால், கடவுளைப் படைக்க வேண்டுமென்று அவன் எண்ணியிருக்க வேண்டும்.

என்றால்-கடவுள் பிறக்கு முன்னரே பிறந்தது எண்ணம்

எண்ணங்களால் கணிக்கமுடியாத காலங்களால் பழமையானது எண்ணம்.

இயற்கை பிறந்தது; எண்ணம் பிறந்தது.

எண்ணம் பிறந்தது; செயற்கை பிறந்தது.

செயற்கை பெருத்தது; உலகம் வளர்ந்தது.

உலகம் வளர்ந்தது; எண்ணம் உயர்ந்தது.

காலங்களையும் தூரங்களையும் அது கணித்தது.

உலகத்தின் பரப்பளவை அது 'சர்வே' பண்ணியது.

ஒளியின் வேகத்தையே அது அளந்துவிட்டது.

ஆனால்—

ஒளி-வினாடிக்கு ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து இருநூற்று எண்பத்திமூன்று மைல் வேகமுடையது என்று கணக்கிட்டு விட்ட எண்ணம்—

இன்னும், தன் எண்ணத்தின் வேகம் மட்டும் எவ்வளவு என்று கணக்கிடவே இல்லை.

(தொடரும்)

வெண்பாப் போட்டி 13.

★

ஈற்றடி

'வெறி' எனத் தொடங்கி 'சரி' என முடிக்க

இறுதி நாள் 11-2-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

INDIA NEWS MART
83. MADAVARAM HIGH ROAD.
Perambur, Madras-11.

வெண்பாப் போட்டி

'வெறி' எனத் தொடங்கி 'சரி' என முடிக்க.

வெறியார் வடவர்தம் மேன்மைக்கே ஈந்து
வறியராய் எந்தமிழர் வாடிக் - கறைபடிந்து
மண்டலமேல் சாகின்ருர் மான்விழியே ! தன்னரசில்
தண்டமிழே ஆள்தல் சரி.

— கி. இராசமாணிக்கம், ஏரகுடி.

வெறிவேண்டாம் நம்முடைய வாழ்நாளில் ; செம்மை
நெறிவேண்டும் ; நல்ல எதிலும் - குறிவேண்டும்.
நம்பிக்கை கொண்டுநம் நாட்டின் நலிவகற்ற
தெம்புக் குணமே சரி !

—பிரம்மை. பா. கிருட்டிணமூர்த்தி, சென்னை-11.

வெறிகொண்ட பார்வை விழிபிதுங்க வந்தே
நெறியற்று நின்ருனே நீசன் ! - அறிந்தும்
அவன்முன்னர் ஆடாத ஆரணங்காய் நின்ருல்
சவமென்ப தன்றே சரி ?

—''நெஞ்சடையான்,'' திருக்கழுக்குன்றம்.

வெறிக்குணம் கொண்ட வடவர் வெருள
நெறியொடு சென்ருல் நிகழாதே - அறிவார்ந்த
தென்னவர் மானத்தால் சிறிப் பகைக்குலத்தின்
தன்னுயிர் போக்கல் சரி.

—எஸ். கே. வெங்கடேசன், சென்னை-7.

வெறிச்சொல் உரைக்கின்ற வீணராம் நேருக்(கு)
அறச்சொல் அறிவுறுத்தல் வேண்டும் - திறச்சொல்லார்
கன்னல் தமிழ்மொழியார் காட்டும் கருங்கொடியே
தன்னுணர் மானம் சரி

மு. வில்லவன்-திண்டுக்கல்.

வெறிமேல் வெறியடா வீணர் தமிழ்நாட்டின்
நெறியார் பெயர்சூட்ட நெஞ்சம் - குறியின்றி
சாக்குகள் காட்டுவார் தட்டிக் கழித்திடுவார்
தாக்குவ தொன்றே சரி.

—கோ. கோவிந்தன் கீழ்நர்மா.

வெறியார்ந்த நெஞ்சில் விடிய விடிய
நெறிசேர்த்தல் என்றும் நிலையா - தறியாளர்
நூலை இணைப்பதுபோல் நுண்ணிய கைநெருட்டால்
சால இணைத்தல் சரி.

—தி. கரிகாலன், கோவை.

வெறியார் இளமுல்லை மென்பல் துவர்வாய்
நெறியார் மடமங்கை நேரில் - பறிபோன
சிந்தையினைத் தேடி எனக்களிப்பார் தெய்வம் போல்
சந்ததம் கொள்வேன் சரி.

—கருப்பன், பாளையப்பட்டி.

வெறிவிளம்பு வாயும் மிகச்சிவந்த கண்ணும்
நெறிகடந்த நெஞ்சுமாய் நின்ருர் - சிறுபொழுது
தாமதமாய் வந்ததற்கே சண்டை அவரென்ருல்
சாமளவும் வாரார் சரி.

— க. தவகியானந்தம், அருப்புக்கோட்டை.

வெறிகொண்டு போனவர் மேல்வினைவு பேணர்
சிறிதென்று தேறவே மாட்டேன் - நெறியென்று
மானம் பெருங்காதல் மங்கை துயர்கண்டு
தானுக வந்தால் சரி.

—முத்து, சைதை.

வெறிமலர்ப் பொன்மேனி வெண்பல் முறுவல்
மறுகிடும் கண்பார்வை வாய்த்த - நறுநுதல்
மானேர் விழியாள் மயக்கம் குறையாமல்
தானே இருந்தால் சரி.

—அரியன், அம்பை.

"வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்"

தமிழ் எழுத்தாளர் சங்கப் புதிய தலைவர் அன்பு கணபதி வேண்டுகோள்

"தமிழ் எழுத்தாளர்களும் ஏனைய தமிழ்ப் பேராசிரியர்களும் ஒன்று பட்டுத் தாய்த்தமிழை வளர்ப்போம் ; வளர்வோம். எழுத்தாளர் சங்கமெல்லாம் இத்தாய்ச்சங்கத்துடன்-1944ல் காணப்பெற்ற இப் பழைய சங்கத்துடன் இணைய வேண்டும். கிளைகளாக, போட்டிச் சங் கங்கள் காணமுயலும் நண்பர்கள், அதைக் கைவிட்டு மீண்டும் நம் சங்கத்தில் சேர்ந்து இதனைப் பலப்படுத்த வேண்டுகிறேன். இம் முயற்சிகளுக்குத் துணைபோக வேண்டா எனத் தமிழ் எழுத்தாள நண்பர் அனைவரையும் அன்புரிமையுடன் விரும்பி வேண்டுகிறேன். வேற்றுமையிடையே ஒற்றுமை கண்டு உயர்வோம். தமிழ், தமிழ்ப் பண்பு வளர்ப்போம், இவ்வுலகமெல்லாம்"-தமிழ் எழுத்தாளர் சங்கத் தின் தலைமைப் பொறுப்பினைத் திரு. கா. அப்பாத்துரை அவர்களிட மிருந்து ஏற்ற புதிய தலைவர் புலவர் அன்பு கணபதி, இளம்பிறைச் சங்கக் கட்டிடத்தில் தம்மை வரவேற்றுப் பாராட்டிய நண்பர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கருத்துத் தெரி வித்தார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்று, பழைய தலைவரைப் பாராட்டி நன்றி தெரிவிக்கவும், புதிய தலைவரை வரவேற்க வும் கூடியது.

திரு கா. அப்பாத்துரை நன்றி கூறுகையில், சிலவற்றை நான் புதிய தலைவரிடம் விட்டுச் செல்லுகிறேன். நண்பர் அன்பு கணபதி செயல்திறம் படைத்தவர். அவர் காலத்தில் சங்கம் மேலும் வளர்ந்து சிறக்க என்னுலான உதவி எல்லாம் செய்வேன். எல்லோருக்கும் நன்றி" எனக் குறிப்பட்டார்.

புதிய தலைவர் பேரர்சிரியர் புலவர் அன்பு கணபதி, பொறுப் பேற்று மேலும் பேசுகையில், தம்மை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்த எழுத்தாள நண்பர்கட்கெல்லாம் இதயநிறை நன்றி தெரிவித்து ஆசிரி யர் கல்கி கிருஷ்ணமூர்த்தியால் புதுப்பிக்கப் பட்டு, அவரும், ஆனந்த விகடன் தேவன் ம. பொ. சிவஞானம், வெ. சாமிநாத சர்மா. வானொலி சோமசுந்தரம் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை ஆகிய பெரும் எழுத்தாளர்களும் தலைவர்களும் இருந்த இடத்தில் தம்மை அமர்த்திய எழுத்தாள நண்பர்களுக்கு நன்றி கூறுவதாகவும் கூறினுர்.

தொடர்ந்து பேசுகையில் தாம் மூவரைத் தம் வாழ்க்கைக்கும் எழுத்துக்கும் வழிகாட்டிகளாகக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். தமிழ்த் தென்றல் திரு. வி. க, அறிஞர் சி. என். அண்ணுதுரை, டாக்டர் மு. வரதராசனுர் இம்மூவரையும் முறையே செவிலித்தாயா கவும், மூத்த தமையனுகவும், இனிய நண்பராகவும் கொண்டு தாம் எழுத்துத் தொண்டு செய்துவருவதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் எழுத்தாளர் தமிழாசிரியரிடை' உள்ள பிரிவு உணர்ச்சி மறையவும், தமிழும் தமிழ்ப் பண்பும் உலகெலாம் பரவவும் பணியாற்ற வேண்டினுர். புத்தாண்டின் முதல் நாளில் எழுத்தாளர் அனைவரும் இந்த உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கூறி இந்த ஆண்டில் சகல எழுத்தாளர்களையும் பற்றிய "யார், எவர் ?" நூல் வெளியிட முடியும் என உறுதியளித்தார்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு, தொலைபேசி எண் 83510.